Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

## பாகம் 4. அத்தியாயம் 29.

நான் முதன் முதல் சிறை சென்றது 1903ம் வருஷத்தில். தன்னடக்கம் வேண்டுமென விரும்பும் ஒரு பிரம்மச்சாரி, தானாகவே அனுஷ்டிக்க வேண்டிய சில நிபந்தனைகள் சிறைச் சட்டத்திலிருந்ததைப் பார்த்தேன். கடைசித் தடவை ஆகாரம் சூரிய அஸ்தமனத்துக்கு முன்னாடியே செய்ய வேண்டுமென்பது அவற்றிலொன்று. இந்தியக் கைதிகளுக்கோ, ஆபிரிக்கக் கைதிகளுக்கோ காப்பியாவது, தேயிலைப் பானமாவது கொடுப்பதில்லை. வெந்த சோற்றில் கொஞ்சம் உப்பு வேண்டுமானால் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். நாவுக்கு ருசியாக வேறொன்றுமே கிடையாது. கொஞ்சம் மசாலைப் பொடியும், சாதம் கொதிக்கும் பொழுது சேர்ப்பதற்குக் கொஞ்சம் உப்பும் கொடுக்கும்படி நான் ஜெயிலரைக் கேட்டேன். "ருசி பார்த்துச் சாப்பிடுவதற்காக நீங்கள் இங்கே இருக்கவில்லை. சுகாதார முறைப்படி மசாலைப் பொடி அவசியமில்லை. சாதம் கொதிக்கும்பொழுது உப்புப் போட்டாலும் பிறகு போட்டாலும் எல்லாம் ஒன்றுதான்" என்று அவர் பதில் சொன்னார்.

மிகுந்த கஷ்டத்தின்பேரில் இந்த நிபந்தனைகள் திருத்தப்பட்டன. ஆனால் இவ்விரண்டும் தன்னடக்கத்தை விரும்பும் ஒருவனுக்கு மிகவும் உபயோகமானவைகள். நிர்ப்பந்தத்தால் ஏற்பட்ட கட்டுப்பாடு நிலைப்பதில்லை; தானாகவே ஏற்படுத்திக் கொள்ளும் கட்டுப்பாடு மிகுந்த பலனுள்ளதாகவிருக்கிறது. ஆகையால் நான் சிறையிலிருந்து வெளி வந்ததும் இவ்விரு வழக்கங்களையும் கைக்கொண்டேன். தேயிலைப்பானம் அருந்தும் வழக்கத்தை நிறுத்தியும், அஸ்தமிக்கு முன் சாப்பிடும் வழக்கத்தையும் என்னால் கூடியவரை அனுஷ்டித்து வந்தேன். இவ்விரு வழக்கங்களையும் கைக் கொண்டு நடப்பதில் இப்பொழுது எனக்கு எவ்விதக் கஷ்டமும் தோன்றவில்லை.

தொடர்ச்சியாகப் பத்து வருஷ காலம் உப்பை அடியுடன் தள்ள வேண்டிய காலம் ஒன்று நேர்ந்தது. சாக உணவைப்பற்றிய நூல் ஒன்றில் உப்பு மனிதனுக்கு அவசியமான உணவுப் பொருளல்லவென்றும், உப்பில்லாத உணவு சௌக்கியத்தை விருத்தி செய்யுமென்றும் நான் படித்திருந்தேன். உப்பைத் தள்ளுவது பிரம்மச்சரியத்துக்கு நல்லதென்று நான் அனுமானித்திருந்தேன். சரீரத்தில் வலுவற்றவர்கள் தானிய உணவைத் தள்ளுவது நல்லதென்று புஸ்தகங்கள் மூலமாகவும், சொந்த அனுபவத்திலிருந்தும் தெரிந்து கொண்டிருந்தேன். எனக்கும் அவைகளில் பிரியம் அதிகம். இப்படியிருக்கும் பொழுது, ரண சிகிச்சை நடந்த கொஞ்ச நாட்களுக்குப்பின் கஸ்தூரிபாய்க்கு மறுபடியும் இரத்தம் போக ஆரம்பித்தது. இந்தத் தடவை மிகவும் கடுமையாகவுமிருந்தது. ஜல வைத்திய சிகிச்சை பலன்படவில்லை. கஸ்தூரிபாய்க்கு என்னுடைய வைத்திய முறைகளில் நம்பிக்கை கிடையாது; ஆனால் தடுக்கவில்லை. அவள் வெளி உதவி வேண்டுமென்று கேட்கவேயில்லை. எல்லா மருந்துகளும் பிரயோஜனமில்லாது போன பின், உப்பையும், தானியங்களையும் தள்ளும்படி சொன்னேன். நான் எத்தனை ஆதாரங்களை வைத்துக் கொண்டு விவாதித்த போதிலும் அவள் ஒப்புக்கொள்ளவில்லை. கடைசியாக, நான் கூட அந்த இரண்டையும் தள்ள முடியாதென்று அறை கூவினாள். நான் வருத்தமும் சந்தோஷமுமடைந்தேன். ஆனால் எனக்கு அவளிடமுள்ள அன்பை வெளியிடக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி சந்தோஷமடைந்தேன். "நீ நினைப்பது பிசகு. நான் வியாதியாக இருந்து வைத்தியர் இவைகளையோ அல்லது வேறெந்தவஸ்துவையோ தள்ள வேண்டுமென்றாலும் நான் ஆலசியமின்றி [illegible] விடுவேன். நீகோ

பார்! ஒரு பத்தியமுமில்லாமலே, நீ தள்ளினாலும் தள்ளா விட்டாலும் நான் இவைகள் இரண்டையும் ஒரு வருஷ காலத்துக்குத் தள்ளிவிட்டேன்" என்று சொன்னேன்.

அவள் திடுக்கிட்டுப்போய், மிகுந்த வருத்தத்துடன் "மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன். தங்களை நன்றாக அறிந்திருந்தும் நான் கோப மூட்டியிருக்கக் கூடாது. நான் இவைகளைத் தள்ளி விடுகிறேன். ஆனால் தயவு செய்து தங்களது சபதத்தை விட்டு விடுங்கள். இது எனக்கு மிகவும் கடுமையான தண்டனை" என்றாள்.

"இந்த சாமான்களைத் தள்ளிவிடுவது உனக்கு மிகவும் நல்லது. அவைகளில்லாமலே நீ சௌக்கியமாக இருக்க முடியுமென்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. என் விஷயத்திலோ நான் செய்த சபதத்தை ஒரு பொழுதும் நிறைவேற்றாம விருப்பதில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டானாலும் ஒரு மனிதன் தன்னைக் கட்டுப்படுத்துவது நல்லதேயாகையால் அது நிச்சயமாகவே நன்மை யளிக்கும். ஆகையால் என்னைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். எனக்கு இது பரீக்ஷார்த்தமாகவும், உனக்கு உன்னுடைய விரதத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு ஆதாரமாகவுமிருக்கும்" என்று சொன்னேன்.

ஆகையால் என்னை விட்டு விட்டாள். "நீங்கள் மிகவும் பிடிவாதக்காரர். யார் சொன்னாலும் கேட்க மாட்டீர்கள்" என்று சொல்லிக் கண்ணீர் விட்டுத் தன்னை சமாதானப் படுத்திக் கொண்டாள்.

நான் இதை ஒரு சத்தியாக்கிரஹமாகவே கருதுகிறேன். நான் மறக்க முடியாத சம்பவங்களில் இது ஒன்றாகும். உப்பும், தானியங்களுமில்லாததினாலேயோ அல்லது அந்த சம்பவத்திலிருந்து அவளது மனதில் ஏற்பட்ட உணர்ச்சி காரணமாகவோ, எவ்விதத்திலோ அவள் முற்றிலும் குணமடைந்தாள். உதிரப் பெருக்கு நின்று அவள் சீக்கிரம் குணமடைந்தாள். இது, வைத்திய விஷயமாக எனக்கு ஏதோ தெரிந்தது போன்ற பாவனையை பலப்படுத்திற்று.

என் சம்பந்தப்பட்ட மட்டில் இவைகளைத் தள்ளினதால் எவ்விதக் கெடுதலுமேற்படவில்லை. தள்ளின வஸ்துக்களை வேண்டுமென்று நான் ஒரு பொழுதும் விரும்பாமலே ஒரு வருஷம் கழிந்தது. எனது புலன்கள் எப்பொழுது மிருந்ததை விடக் கட்டுப்பட்டிருப்பதை நான் அறிந்தேன். இந்த அனுபவம் தன் மறுப்புக்கு ஆவல் கொள்ளும்படி தூண்டினதால் நான் இந்தியாவுக்கு வந்த பின்னும் நீண்ட காலம் இந்த வஸ்துக்களைச் சேர்த்துக் கொள்ளாமலேயிருந்தேன்.

1914-ம் வருஷம் நான் லண்டனிலிருந்த பொழுது ஒரே ஒரு தடவை தான் இந்த இரண்டு வஸ்துக்களையும் சேர்த்துக் கொள்ள நேர்ந்தது. சந்தர்ப்பத்தைக் குறித்து பின்னால் எழுதுகிறேன்.

தென் ஆபிரிக்காவில் எனது கூட்டாளிகளில் பலர் உப்பையும், தானியங்களையும் தள்ளி விசேஷ பலனடைந்தது எனக்குத் தெரியும். வைத்திய முறைப்படி இந்த உணவைப் பற்றி இரண்டு வித அபிப்பிராயங்களிருக்கலாம். ஆனால் ஒழுக்க முறை சம்மந்தப்பட்ட மட்டில் தன் மறுப்பு ஆத்மாவுக்கு நல்லதென்பதில் எனக்கு சந்தேகமே கிடையாது. வாழ்க்கை முறை வேறுபடுவது போலவே, தன் மறுப்பை விரும்புகிறவனுக்கும், இன்பத்தை விரும்புகிறவனுக்கும் ஆகார முறையும் வேறுபட வேண்டும். பிரம்மச்சரியத்தில் விருப்பமுள்ள பலர், சுகத்தை விரும்புகிறவர்களின் வழியைப் பின்பற்றி அனேகமாகத் தங்களது லட்சியத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறார்கள்.

---

# மாய வாழ்வு.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

[முன் தொடர்ச்சி]

## 5-வது அத்தியாயம்.

உத்தியோகஸ்தர்கள் தீர விசாரித்ததின் மூலமாக கமலாம்பாள் வீட்டில் கொலையுண்டது மணி நாயகப் பிரபுவின் மனைவியென்று தெரிந்தது. அஃதாவது, மதிசுந்தரரின் அன்னை. இக்கொலையுண்ட விஷயத்தையும், தாசி, தாய்க் கிழவி, போலீஸ் முதலியவர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டிருப்பதையும் பத்திரிகையில் பிரசுரித்திருப்பதை மைனர் வீட்டு வியாபாரத்தை நடத்தி வருபவனான சத்திய நாதனுக்கு அவனுடைய நண்பர் காட்டினார். மைனர் ஜெயிலிலிருக்கும் விஷய விபரமும், அப்பொழுது தான் ஒருவரால் பத்திரிகையில் காட்டப்பட்டு சத்தியநாதனும் தெரிந்தார். அச்சமயத்தில் மைனர் லீலையாடியிருந்ததால் பொக்கிஷம் காலியாகியதுடன் கடன் தொகையுமதிகமாயிருந்தது. கடனீந்தார் பலர்வந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். பலருக்குக்கொடுக்கப்பட்டது. 10000 ரூபாய் கொடுத்த ராமச்சந்திர சிங்கும் வந்திருந்தார்.

சத்திய நாதன்—ஐயா! இன்னும் ஒரு மாதத்திற்குப் பின் வட்டியோடு கொடுக்கிறேன்.

ராமச்சந்திர சிங்— அப்படியல்ல ஐயா. தவணையும் தவறிவிட்டது; பணத்துக்கும் அவசரமாயிருக்கிறது.

ச—ஐயா! 2 கோடி ரொக்கமும், 3 கோடி சொத்துக்களுமாய் மணி நாயகப் பிரபு இருக்கும் போதிருந்தன. மைனர் தலையெடுத்து லீலையாடி பணத்தை சூறையாடி விட்டார். என் செய்வது! பொறுத்தது பொறுத்தீர்கள். இன்னும் ஒரு மாதந் தானே! என்னிடம் நம்பிக்கையில்லையா?

ராம—இல்லை; அவசியம் வேண்டும். உடனே சத்தியநாதன் ரூபாய் 10000 தந்து அதன் வட்டிக்கும் பெறு மதியான சொத்தை யெழுதிக் கொடுத்து விட்டார். சொத்தெல்லாம் மூழ்கி ஒரு கோடி ரூபாய்கடனிலாழ்ந்திருக்கிறதென்று கணக்குப் பார்த்துக் கொண்டார்.

லக்ஷப் பிரபானாலும் வரவுக் கதிகச் செலவு செய்தால் பிச்சைப் பிரபாகி விடுவான். எவ்வளவு பண மிருந்தாலும் எத்தனை நாட்களுக்கு நிலைக்கும்? கடன் விழுங்கிவிடும். நம்மிடம் பணிந்து நின்றோனிடம் நாம் பணிந்து நிற்க வேண்டியிருக்கும். செலவிடல் எளிது; தேடுவ தரிது. மைனரை கடனெனும் தண்ணீர் நிலமெனும் செல்வத்தை அரித்துத் தின்று மூழ்கி விட்டது. செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வென்பது பொய்யாமா? வண்டியில் போட்டு பழக்காத காளையும், பெரியோர் கைக்குள்ளிருந்து பழகாத வாலிபனும் பிழையின்றி வாழ்வதரிது. நிற்க,

சத்தியநாதன் கமலாம்பாள் வீட்டிற்கு வந்தான். சவம் அடக்கமாயிற்று. பிணத்தின் புகைப்படத்தாலும், ஆடையாபரணத்தினாலும் தன் எஜமானியெனக் கண்டார். உடனே அங்கு பிணத்தை முதலில் கண்டு பரிசோதித்த உத்தியோகஸ்தரை வீட்டார்க்கு தகவல் தெரிவிக்காமல் அடக்கம் செய்ய உத்தரவு செய்த குற்றத்திற்காகப் பிராது செய்தார். இதை யறிந்த அவ்வுத்தியோகஸ்தர் தன்னை மன்னிக்க வேண்டுமென்றும், பிராதை வாபஸ் செய்து கொள்ள வேண்டுமென்றும், தான் குடிமயக்காலப்படிச் செய்து விட்டதாகவும், உங்கள் பெண்ணை கொலை செய்த தாசி, போலீஸ் முதலியவர்களைத் தூக்கில் போட்டுவிடுகிறேனென்றும் மன்றாடிக் கேட்டுக் கொண்டார். பணிய வேண்டியவன் காலில் குடி பணியச் செய்கிறது. ஆ! குடி குடியைக் கெடுக்கு மென்பது மிகையாகா. குடும்பங் கெட்டு, கடன் பட்டு, மானம் விட்டு, நோய் தொட்டு, சுகம் சுட்டு, விரைவில்மரண மடைய வைப்பது மிச்சண்டாளக் குடியே.

## 6-வது அத்தியாயம்.

ஜெயில் காவலாளியும் மைனரும்முன்னோத்தியாயத்தில் கூறியபடி பேசிக் கொண்டிருந்து உள்விசுவாசமேற்பட்டு மாலை ஆறரை மணிக்கு காவலாளி மைனரை வெளியேதிறந்து விட்டான். ஏனெனில் பின்னால் மைனரிடம் பெரும் வெகுமதி பெறலாமென்றும், இவ்வுத்தியோகம் [illegible] விட்டாலும் மைனரிடமோர் பதவி உதித்துவிடுமென்ற நம்பிக்கையாலும் தைரியமாய் விட்டான். ஆனாலும் மைனர் வேறு ஜோலியாய்ப் போவதாகச் சொல்லியதால் ஒரு மணி நேரத்தில் வந்துவிட வேண்டுமென்றும், அல்லது இரா உணவு கொடுக்கும்போது தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டரென்று மேலதிகாரிகளிடம் கூறி பின்னால் பிடித்துக் கொடுத்து விடுவேனென்றும், பின்னால் பிடிபட்டால் தூக்குத் தண்டனை கிடைக்குமென்றும் பயமுறுத்தியும் விட்டான்.

ஆனால் மைனர் அநேகமாய் 1¼ மணி நேரத்தில் ஸ்நானம் செய்து கொண்டு வந்தார். வாசகர்களே! மைனர் ஜெயிலை விட்டு வெளி சென்றதும் நேரே போய் கொலை செய்து விட்டு குளித்து விட்டு ஜெயிலுக்கே வந்துவிட்டார். ஏனெனில் ஒளிந்து கொண்டால் பின்னாலகப்பட்டு சங்கடப்படவேண்டுமே யென்ற பயமே. ஏதோ ஒருவேளை கொலையைப் பற்றிய சந்தேகம் தன் மேல் நேர்ந்தாலும் ஜெயிலிலிருந்தவன் எப்படிக் கொலைசெய்திருக்க முடியுமென்று கொலை சம்பந்தமான ஐயத்திற்குவழியில்லையென்பதுவுமே. இப்போது ஜெயிலில் முன் கூறிய நால்வரும் ஒரு துக்கக் குடும்பம் போலிருந்தனர்.

ஆனால் தன்னால் கொல்லப்பட்ட வேசியெப்படி உயிரோடு வந்தாளென்று மைனர் ஆச்சரியப்பட்டார். கமலாம்பாள் மைனர் அன்று நாம் செய்த மோசத்திற்கு என்னமும் செய்து விடுவானோ எனப்பயந்தாள். இப்படியாக ஒருவர்க்கொருவர் தாங்களே சம்சயப்பட்டு தலைகுனிந்து ஒருவரையொருவர் பார்க்காது சிலையெனஉட்கார்ந்திருந்தார்கள். நிற்க, மைனர் தாயின் மரண விபரமாவது:—

மைனரின் தாய் மைனரைவிட்டு தனித்திருக்க சகிக்கவில்லை. பிள்ளையினருமையை பெற்றவளன்றோ அறிவாள்! சில நாட்களுக்கு பின் சத்தியநாதன் மைனரின் அன்னை மெலிவதற்கு காரணம் மைனரின் பிரிவாலென அறிந்து அந்த லக்ஷ்மியம்மாளை ஒரு பாலியன் துணையோடு மைனரிருக்குமிடம் அனுப்பிவைத்தான். போகும்போது ரயிலில் பிரயாணச் சீட்டு வாங்கச் சென்ற பையன் திரும்பிவரவில்லை. பாவம்! கஷ்ட காலம் போலும். பின் கஷ்டத்துடன் ரயிலேறி சத்திய நாதன் சொல்லிவிட்ட ஊரடைந்து குறிப்பிட்டவிடம் சென்று பிள்ளைப் பாசத்தால் நாடகக் கொட்டகையை அடைந்தாள். முன் நாடக நண்பர்கள் மைனரோடு தன் வீட்டிற்கு வந்தது ஞாபகமிருந்ததால் அவர்களைக் கண்டுமதிசுந்தரத்தை யெங்கேயென லக்ஷ்மியம்மாள் வினவினாள். அவர்கள் தங்களுக்குத் தெரியாதெனறார்கள். பின் லக்ஷ்மியவர்களுக்கு கொஞ்சம் ரூபாய் கொடுத்ததினாலும் அவர்கள் குடி மயக்கத்திலிருந்ததாலும் தாசி கமலாம்பாள் வீட்டிற்குப் போகிறேனெனச் சொல்லிப் போனாரென்று பொய்யும் மெய்யும் கலந்து சொன்னார்கள். உடனே வீடிருக்குமிடம் விசாரித்து அங்கு கன்று தேடும் பசுப்பால் சென்று கொண்டிருக்கிறாள். அப்போது மணி ஏழேகால். எமன்காலும் அவள் பின் நடைகொள்கிறது. கமலாம்பாள் வீடுகண்டாள். கதவு பாதி சாத்தப் பட்டிருந்தது. முழுவதும் திறந்து கொண்டு வீட்டினுள் சென்றாள். பாவம்! கட்டியணைக்க வந்த தாயை வெட்டி வீழ்த்தினன் சேயன். எங்ஙனமெனின், வீடு புகுந்த சமயத்தில் இந்த லக்ஷ்மியின் பிள்ளையான மைனர் வந்து தன் தாயெனக் கவனியாது இவள்தான் தாசி கமலாம்பாளென ஒரே வீச்சாக வாளால் வீசிக் கொன்றான். இச் சந்தர்ப்பத்தில் தாசி, கிழவி ஆகியவர்கள் உள்ளே சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் அவர்களுக்கு வெளியே நடந்த விஷயமொன்றும் தெரியாது. (தொடரும்.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## நாடார்குல மித்திரன் மதிப்புரைகள்.

### "குடியரசு"

ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்களை பத்திராதிபராகக் கொண்ட "நாடார்குல மித்திரன்" என்னும் தமிழ் வாரப் பத்திரிகையின் ஒன்பதாவது ஆண்டின் முதல் வாரப் பிரதி வரப்பெற்றோம். சென்ற ஆண்டு பத்திரிகையைவிட இவ் வாண்டு பத்திரிகை அளவில் பெரியதாகா விட்டாலும், வனப்பிலும், விஷயத்திலும் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பார்க்க அகமகிழ்கின்றோம். அன்றியும், இப் பத்திரிகை விசேஷமாக நாடார் குல முன்னேற்றத்தையும், பொதுவாக தமிழ் நாட்டின் முன்னேற்றத்தையும், தாய் நாட்டின் முன்னேற்றத்தையும் குறித்துக் கொண்டு அரசியல், சமூக இயல், கல்வி, மதம் ஆகிய விஷயங்களை எடுத்தாண்டு எழுதி வருவதால் விசேஷமாக நாடார் குலத்தவரும், தமிழ் நாட்டாரும் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஃ ஃ

### "சுதேச மித்திரன்"

'கல்வி கடைப்பிடி' என்ற முத்திரையிட்ட கொடியைத் தாங்கி ஏக சக்ராதிபத்தியம் இந்தியா முழுதும் இந்திய மாதா செலுத்துவது போன்ற படத்தோடு விளங்கும் 'நாடார்குல மித்திரன்' ஒன்பதாம் ஆண்டு புகுந்த காரணமாக உருவத்தில் சில மாறுதலோடு விளங்கி வரும் புதிய பகுதி நமக்குக் கிட்டியது. பிறரைப்போய் யாசகம் கேட்பதுபோலில்லாமல் கல்வி முன்னேற்றத்தாலும் தாமும் தம் குலத்தினரை, தேசத்தோடு முன்னேறச் செய்யலாம் என்பது இப் பத்திரிகையின் துணிபு போலும். இதை முற்றும் நாம் ஆதரிக்கிறோம். இதை ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அருப்புக்கோட்டையில் வெளியிடுகிறார். சென்ற 8 வருஷங்களாக இப் பத்திரிகை செய்து வந்த ஊழியம்போல் இன்னும் பல வருஷங்களுக்குச் செய்யும்படி ஈசன் அருள் புரிவானாக,

ஃ ஃ

### "தமிழ் நாடு"

இது அருப்புக்கோட்டையினின்றும் ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்களை ஆசிரியராகக் கொண்டு சென்ற எட்டு ஆண்டுகளாக நாடார் சமூகத்திற்குத் தொண்டாற்றி வந்ததை தமிழுலகமும், முக்கியமாக நாடார் சமூகத்தினரும் நன்கு அறிவார்கள். இப் பத்திரிகை பல ராஜீய சமூக விஷயங்களை நன்ருக விளங்கும்படி வெளியிடுகிறது. இப்பொழுது இப் பத்திரிகையின் 9-ம் ஆண்டு தொடங்கி யிருப்பதால் மேலும் மேலும் நாட்டிற்கும், நாடார் குல மரபினருக்கும் ஊழியஞ் செய்து நீண்ட நாள் விளங்க இறைவனை இறைஞ்சுகிறோம்.

வருஷ சந்தா உள்நாடு ரூ 4-0-0

வருஷ சந்தா வெளிநாடு ரூ 5-0-0

---

## ஓர் நாடார் வக்கீல் மரணம்.

நாகர்கோயில் ஸ்ரீமான் பி. வி. டானியல் நாடார், பி. ஏ. பி. யல், ஹைகோர்ட் வக்கீல் அவர்கள் நாளிது டிசம்பர்மீ 18உயில் காலை 11 மணிக்கு இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தினர் என் ஷெ யார் திருக்குமாரர் ஜோசுவா ஆர். டானியல் நாடார் அறிவிக்கிறார். இவரது ஆன்மா சாந்தியடையவும், இவரது பிரிவாற்றுமைக்கு வருந்தும் இவரது குடும்பத்தாருக்கு ஆறுதலளிக்கவும் இறைவன் அருள் கொள்வாராக.

---

மூடக் கொள்கைதனை மூடக்
(குழி தோண்டுங்கள்.
நேரிய செய்லைக்கொள்ளசீரிய
(அறிவு கொள்ளுங்கள்.

---

## நாடார் பெருமக்களுக்கோர் விண்ணப்பம்.

நற்குண ரத்தினங்காள்!

தமிழ் பாஷாபிமான உணர்ச்சியும், குலாபிமானத்தையும், தேசாபிமானத்தையும், பொதுநல உணர்ச்சியையும் உண்டுபண்ணுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டுழைத்துவரும் நம் மித்திரனுக்கு இது போது 9-வது வயது நடந்துவருகிறது; 1928-ல் செப்டம்பர் மீ முதல் 9 வருஷம் முடிந்து 10-வயது பாலகனாகின்றான் என்பது நம் சமூகத்தினர் அறிந்ததொன்று. அவனது வயதுக்கும், உருவத்திற்கும், காத்திரத்திற்கும், தக்க போஷணையில்லாது மெலிகிறுனென்று ஒருவாறு நம் சமூகத்தினருக்கு இதற்கு முன்பு பல பத்திரிகாபிமானம் பூண்ட நண்பர்களறிவித்திருப்பது தங்களுக்கு ஞாபகமிருக்கக்கூடும். ஆகையால் இப்பொழுதுள்ள போஷகர்களும் சந்தாதார்களும் போதாதுஎன்றே இச்சிறு விண்ணப்பத்தை வரையலாயினேன். எங்குல மணிகளே! நம்குல திலகம்போல் விளங்கி யுலவி வரும் மித்திரன் பாலன்பு கூர்ந்து இன்னும் போஷகர்கள் சந்தாதார்களதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு போஷகரும் சந்தாதாரும் தங்களால் கூடிய சிரத்தை யெடுத்தால், மித்திரன் இன்னு மதிகப் பலங்கொண்டு, உற்சாகங் கொண்டு, அழகும் பொலிவுங்கொண்டு சந்தோஷமுகத்தான் தன் இனிய மழலைச் சொற்களால், ஆதரிப்பார் அனைவரையும் பெரிதும் மகிழ்விப்பானென்பது இங்கு சொல்லாமலே அன்புடையருக்கு விளங்கும். இப் பாலகனது சுகத்திலும், வளர்ச்சியிலும், வளத்திலும், நலத்திலு மீடுபட்டு நம் க்ஷத்திரிய குலச் சம்பன்னர்கள், அன்னவனுக்கு உதவி புரிய முன்வரவேண்டும். அவனது அபிவிருத்தி அவர்கள் கையிலே யிருக்கின்றது. இதை நான் நமது நண்பர்களிடம் வினயத்துடன் வேண்டிக்கொள்கிறேன். அன்புடைய ஐயன்மீர்! தாங்களொவ்வொருவரும் நம் "நாடார் குல மித்திரன்" என்னும் அருங்குணம் படைத்த நண்பனை தாங்கள் போஷித்துவருவதுபோல் தங்கள் தங்கள், சிநேகிதர்களையும் புது போஷகர்கள் சந்தாதார்களாகச் சேர்த்துக் கொடுத்து ஆதரிக்கும்படியாய் மிகத்தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறேன். நம்மனை வோருக்கும், நம்மித்திரனுக்கும், அவனின் ஆசிரியர், திருவாளர். சு. ஆ. முத்து நாடார் அவர்களுக்கும் ஈசன் கிருபை பாலிப்பாராகவும்.

எம். போன்னையா நாடார்,
ஹெறந்தலை,
கோளும்பு.

---

## நீதி வாக்கியங்கள்.

1. உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்; ஐசுவரியவானாகிற தற்குத் தப்பான்.

2. ஏழைகளுடைய நியாயத்தை உண்மையாய் விசாரிக்கிற ராஜாவின் சிங்காசனம் என்றும் நிலைபெற்றிருக்கும்.

3. நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமலிராதே.

4. தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீர்க்குச் சமானம்.

5. தன் வேலையில் சாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராசருக்கு முன்பாக நிற்பான்.

பி. பா. யோ. செல்லையா நாடார்.

---

பீடார் பெருஞ் சமூகப் பெற்றி
(சேர் நன்மக்கள்
நாடார் குலத்தவர்க்கும் நாட்ட
(வர்க்கும்—வாடாது
உழைத்து வரும் மித்திரனுக்
(கூக்கமது காட்டி யது
தழைத்து வரச் செய்வீர் தாம்.

---

## காங்கிரஸ் மகாசபையும், வர்ணாச்சிரம தர்மமும்.

நம் நாடு விடுதலை யடையப் பாடுபடும் காங்கிரஸ் மகாசபை ஒன்று கவனிக்க வேண்டும். இக் கவனிக்க வேண்டிய விஷயம் இதன் கவனத்திலுள்ளது தான். ஆனால் செய்கையிற் காட்டின பாடில்லாததா யிருக்கிறது. வாய் வேதாந்தமா யிருந்து வரும் சங்கதியா யிருக்கிறது. இது பற்றி இதன் தலைவர்கள் வாய் ஓயாது பேசிவிட்டு பின் பேச்சுக்கு மாருக நடந்து கொண்டு வருகிருர்கள்.

சுயராஜ்யம் பெறுவதற்கு இந்திய மக்களின் ஒற்றுமையே வேண்டற்பாலது. இவ்வொற்றுமை கொள்வதே அசாத்தியமான காரியமா யிருக்கிறது. மதப் பேயாலும், வகுப்புப் பேயாலும் இவ்வொற்றுமைக்கான உழைப்பு மணற் கயிறு திரிப்பதுபோலிருக்கிறது. மதப் பெயரால் ஒற்றுமை குலைந் திருப்பதைப் பார்க்கிலும் ஒரு மதத்திற்குள்ளேயே வகுப்பு பெயரால் ஒற்றுமை குலைந்திருப்பது தான் வெறுக்கத்தக்கதில் முதலாவதாகும். இதை யொழித்து விட்டால் மத சம்பந்த ஒற்றுமையும் எளிதில் கூடும். வர்ணாச்சிரம தர்ம முறையால் நம் நாடு சின்னா பின்னமாய்க் கிடக்கிறது. இது காங்கிரஸ் சபையின் கண்ணுக்குத் தப்பினதில்லை. ஆனால் காங்கிரஸ் காரர்களில் பெரும்பாலோர் இவ் வருணாச்சிரம தர்மத்தை ஓம்புகிறவர்களா யிருக்கிருர்கள். தமக்குச் செல்வாக்குப் பெற்றுக் கொள்வதற்காக இவர்கள் வாய் குளிர் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் புரிந்து பேசி சம உரிமைக்கான தீர்மானங்களும் நிறைவேற்றி விடுகிருர்கள். ஆனால் பலனேதும் கிடைத்த பாடில்லை. பகிர் முகத்தில் பரிவும், அந்தர் முகத்தில் எரிவும் கொண்டிருந்தால் ஒற்றுமை எங்கனே கூடுங் காரியமாகும். செல்வாக்குப் பெறும் நோக்கமாகத் தாழ்த்தப்பட்டார் பேச் செடுக்கும் தலைவர்களிடம் பாடத்தைக் கற்றோ அல்லது உண்மையிலோ ராயல் கமிஷனும் தாழ்த்தப்பட்டவரைத் தூக்கிவிடப் போகிறதாகக் கூறுகிறது. அது எப்படியா யினும் அதைக் குறை கூறுவதிலொன்றுமில்லை. கட்டுச் சோற்றுக்குள் எலியை வைத்துக் கட்டின மாதிரியில் நம்மகத்திற்குள்ளேயே விஷமம் இருக்கும்போது அதை நோவ தென்ன?

வர்ணாச்சிரமத்தை யொழிக்க மாட்டாது காங்கிரஸ் சபை சுயராஜ்யத்தைக் கோருகிறது. இது ஆகாயக் கோட்டை கட்டுவதே யாகும். இதை ஒழிக்காமல் சுயராஜ்யப் பேச்சுப் பேசுவதிலேயே நாட் போக்கினால் உண்மையில் நாடு நலம் கோராது தமது வாய் வன்மையைக் காட்டும் தலைவர்களாகக் கருதப்படுவார்கள். காங்கிரஸ் போர்வையைப் போர்த்த சுயநலத் தலைவர்கள் தமது மனச் சாக்ஷியை மதித்து நம்மது லக்ஷியமென்ன; அது எவ்வகையில் கைகூடும் என்பதை யோசிக்கட்டும். யோசிக்கின் வர்ணாச்சிரம தர்மம் ஒழியுமட்டும் சுயராஜ்யப் பேச்சுப் பேச யோக்கியதை யில்லை யென உணருவார்கள். இவ் வுணர்ச்சி கொண்டு அதற்கான வேலையில் காங்கிரஸைத் திருப்புவார்களாக. இதில் வெற்றி பெற்று அடுத்து சுயராஜ்யப் படி யேறுதல் உசிதம். வர்ணாச்சிரம தர்மத்தை விடக்கூடாது எனக் கருதின் காங்கிரஸில் வீற்றிருக்கத் தகுதியில்லை. பாமர மக்களை யேமாற்றிக் காலந்தள்ளலாம்; ஆனால் பாரத தேவியை ஏமாற்ற முடியாது. அவ் வம்மையாருக்குப் பயந்தேனும் போலித் தேசாபிமானத்தை நீக்கி உண்மைத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பார்களாக. காங்கிரஸ் வர்ணாச்சிர தர்ம மொழிய என்ன வேலை செய்கிற தென எல்லோரும் எதிர்பார்க்கிருர்கள்.

பெ. ப. சின்னச்சாமி நாடார்,
முத்தாதிபுரம்.

---

## இராமநாதபுரம், ஜில்லாப் போர்டு பிரஸிடென்டவர்களுக்கு கேள்விகளும். அவற்றிற்குப் பதில்களும்.

மாஜி சென்னை சட்டசபை யங்கத்தினரும், இராமநாதபுரம் ஜில்லாப் போர்டு மெம்பரும், சிவகாசிப்பகுதிக்கு தீர்வாதிகாரக் கமிட்டித் தலைவருமான ஸ்ரீமான் மொ. ஆ. சிதம்பர நாடார் பி. ஏ. பி. எல். அவர்கள், 7-11-27-ல் வெளியான மித்திரனில் "ராமநாதபுரம் ஜில்லாப் போர்டார் கவனிக்க வேண்டும்" என்னும் விடயத்தை யொட்டி டி போர்டு பிரஸிடென்ட் வர்களுக்கு விடுத்த கேள்விகளும், அவற்றிற்குப் பதில்களும் பின் வருமாறு:—

கேள்வி:—கல்லூருணிக்கும் சாயல்குடிக்கு மிடையில் புதிதாகப் போடப்படும் ரோடுக்கு இனமாகக் கல்லூருணி நாடார்களுக்குச் சொந்தமான ஊருணியில் மண்ணை வெட்டி யெடுத்துக் கொள்ள இஞ்ஜினியரிங் டிபார்ட்மென்ட் முயற்சி செய்ததுண்டா?

பதில்— இவ்விஷயத்தில் முயற்சி கொள்ள வேண்டுமென்ற பிரச்சினை கிடையாது. கல்லூருணி நாடார்களே தங்கள் ஊருணியிலுள்ள மண்ணை வெட்டி யெடுத்து உபயோகிக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். மண் வெட்டிக் கொள்வதால் ஊருணி ஆழமடையும் பிரயோசன முண்டென்பது கருதி அவர்கள் வேண்டுதல் செய்தார்கள். இவ் வேண்டுதலின்படியே செய்து கொள்ள ஜில்லாப் போர்டார் ஓவர்ஸீயருக்குக் கட்டளை யிட்டனர். அக் கட்டளையின்படி செலவு சுருக்கமாயிருக்கு மட்டும் மண்ணைவெட்டி யெடுத்தார்கள். ஊருணி மிகவும் ஆழமாய்ப் போய் விட்டதால் தேவையான அளவு மண் வெட்டுவதற்குக் கஷ்ட மேற்பட, அதனால் கூலியும் அதிகப்பட, சிக்கனச் செலவு காரணமாய் பக்கத்து வெளி நில மொன்று ஸ்திரமாக கல், மண் வெட்டிக் கொள்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போதும் கூட நாடார் ஊருணியில் கூடியமட்டும் மண் வெட்டப்படுத்தான் வருகிறது.

கே—இதர ஜாதியார் யோசனையின்படி நாடார் ஊருணியில் மண் வெட்டுவதை நிறுத்த வில்லையோ?

பதில்— இச் சங்கதி பொருந்தமற்றது.

கேள்வி—நாடார் ஊருணிக்கு அருகில் ரூபாய் 40—0—0-க்கு ஓர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறதா?

பதில்—முதற் கேள்விக் குரிய பதிலின் கடைசிப் பாகத்தைப் பார்த்துக் கொள்க.

---

## அமீரின் அரிய பிரசங்கம்.

### முஸ்லிம்களுக்குப் புத்தி.

நாளிது டிசம்பர் மீ 16 உயில் ஜும்மா மசூதியில் 50000 முஸ்லிம்கள் வரை கூடியிருந்தனர். அவர்களுடன் சரி சமமாக ஆப்கானிய அமீரும் கலந்து கொண்டு ஆண்டவனைத் தொழுதார். ஜும்மா மசூதியில் எள் விழ இடமில்லாமல் கூட்டம் கூடியிருந்தது. ஒருவரை யொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தனர். அனைவரும் தொழுது முடிந்த பின் அமீர் அங்கு கூடியிருந்தவர்களின் வேண்டுகோளிற் கிணங்கி ஒரு பிரசங்கம் செய்தார். பிரசங்கத்தில் பேசியதாவது:—

உங்களுடைய மதத்தை எவரும் மரியாதை செய்ய வேண்டுமென்று விரும்புவீர்களாயின், நீங்கள் பிற மதங்களையும் மரியாதை செய்ய வேண்டும்.

ஹிந்துஸ்தானத்திலுள்ள முஸ்லிம்கள் பசு வதை என்ற விஷயமாக ஹிந்துக்களுடன் வீண் சண்டை யிடுவரனேன் என்பது புலப்பட வில்லை. பிற மதங்களை நிந்தனை செய்யக் கூடாதென்று நபிகள் நாயகம் கூறி யிருக்க அதற்கு மாருக முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் பூசலிடுவது சரியல்ல. நாம் பிற மதங்களை நிந்தனை செய்வது நம் மதத்திற்கே அவமானத்தை விளைவிக்கக்கூடியதாகும். ஆகவே முஸ்லிம்கள் பிற மதஸ்தர்களுடன் சண்டையிடாமல் ஒற்றுமையாக வாழும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். (காகோஷம்)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம

சேது மின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியை மாத்ரு வெளியை மனதவிழ நிறைவான துரிய வாழ்வைத்

தீதில் பரமாம் பொருளைத் திருவருளை நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஞு மார்கழி மீ ௰௬ உ

---

## ஞான வீரர் திருநாள்.

இமயம் முதல் குமரி வரை சுவாமி சிரத்தானந்தரென்னும் ஞான வீரரைத் தெரியாதார் ஒருவருமிரார். இவர் முற்றுந் துறந்த துறவியாயிருந்தும், நமது தாய் நாட்டிற்குச் செய்து வந்த தொண்டு என்றும் மறக்கத்தக்கதல்ல. இவர் ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்ட வகுப்பினர்கட்கும் தம் வாழ் நாட்கள் முழுதும் மிகவும் உழைத்து வந்தார். ஆரிய சமாஜத்தின் போதகர் ஆரிய நியாகம் செய்தார். இந்து ஜன சமூகம் பலம் இழந்து நசிந்து போகாமல் மக்கள் மனதில் புத்துணர்ச்சியை வளர்த்து கண் விழிக்கச் செய்தார். இந்து மகா சபைக் கிலக்காகவு மிருந்தார். முஸ்லீம்கள் சிலர் தங்கள் மதத்திற் கின்னல் விளைவிப்பவரெனக் கருதி இடுக்கண் விளைவிக்க வெண்ணிய காலத்தும் அஞ்சா நெஞ்சினாராய் முஸ்லீம் நண்பர்கள் சந்தேக மற அவர்கள் மசூதியிலேயே அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதிகார வர்க்கமும் நடுக்கமுறப் பெரிய ராஜீய வாதியாகவும் விளங்கி வந்திருப்பதுடன் பல முறை பயமுறுத்தலுக்கும் பயப்படாதிருந்தார். கேரள நாட்டிலுள்ள வைக்கம் ஈழுவர் சத்தியாக்கிரகத்திற்குத் தாம் நேரில் வந்து நல்லுதவி செய்தார். அந்தோ! இவ்வாறு இன்னும் பல தொண்டுகளும் இந்திய நாட்டுக்கு இடைவிடாமற் றிரிகாண சுத்தியுடன் செய்து வந்த இவ் வுத்தமரை, சென்ற வருடத்தில் டில்லியில் கொலை பாதகன் அப்துல் ரஷீத் என்பவன், எனுகிதாத நாயனுரென்னும் சிவ பக்தரை அதிசூரன் வலியப் போருக் கழைத்து வஞ்சகமாய்க் கொன்று விட்டது போல் சுவாமிகளை மத விஷயமாகப் போருக் கழைத்து மறைவிலிருந்த துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டானன்றே?

அவர் சிவ சாயுச்சிய பதவி யடைந்து இன்று ஒரு வருடமாகிறது. அந்த ஞான வீரர் திருநாள் நாடெங்கும் மிக்க அனுதாபத்துடனும், பக்தியுடனும் கொண்டாடப்படுகின்றது. நாமும் அவருடைய ஆத்மா கடவுள் திருவடியில் இரண்டறக் கலந்து சாந்தி பெறும்படி மிகவும் வணக்கத்துடன் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

இப் பெரியார் திருநாளை இந்திய நாடெங்கும் மரியாதையுடன் கொண்டாடும் இச் சந்தர்ப்பத்திலே, "பட்ட காலிலேபடும்; கெட்ட குடியே கெடும்" என்னும் பழமொழிக் கேற்ப சுவாமிஜீயின் திருக் குமாரரும், "அர்ச்சுனன்" பத்திரிகையின் ஆசிரியருமான இந்திரா அவர்களுக்கு பத்திரிகையில் மதத் துவேஷத்தை யுண்டு பண்ணத் தக்க வார்த்தைகள் பொறித்து விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு மூன்றரை வருடம் கடுங் காவலும், ஆயிரத்து ஐநூறு ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டு விட்டதைப் பற்றி நம் நாடு வருந்துகிறது; நாமும் விசனிக்கின்றோம்.

---

## ஆப்கன் அமீரும், அரசர்கள் வாசலும்.

ஆப்கன் தேசமானது நம் இந்தியப் புராதன ஐம்பத்தாறு தேசங்களி லொன்றுகவே யிருந்து வந்திருக்கிறது. இந்தியாவை ஒரு காலம் ஏக சக்ராதி பத்தியம் செலுத்திய துரியோதன மகாராஜனுடைய தாயாரும், சகுனி மாமாவும் பிறந்த காந்தார தேசமே தற்போது ஆப்கானிஸ்தானென்று விளங்குகின்றது. அதை இப்போது ஆளும் அரசர் அமனுல்லாகான் ஆவர். அவருடைய குணமும், தைரியமும் அவருடைய ஆளுகையின் தன்மை வெகுவாய் விளக்கிக்காட்டி வந்திருக்கிறது. அவர் ஐரோப்பா சென்று சர்வ தேசங்களின் ஆளுகையையும், ஆங்காங்குள்ள இதர விஷயங்களையும் அறிந்து தம் நாட்டை இன்னும் எவ்வாறு மேன் பெறச் செய்யலா மென்று கருதவே தம் நாட்டை விட்டுப் புறப்பட்டு பம்பாய் வந்து சேர்ந்திருக்கிறார். இந்தியச் சர்க்காரும், இந்து முஸ்லீம்களும் அவர் வருகையை மரியாதையுடனும், அன்புடனும் எதிர்பார்த்திருந்து அழைத்திருப்பதே அமீர் அவர்களுடைய பெருந் தன்மையைப் பெரிதும் விளக்குகின்றது.

ஆனல் அவர் பம்பாயில் வந்திறங்கும் போது இந்தியாவுக்கு மேல் வாசலென்னும் பம்பாய் 'அப்பாலோ' பந்தலில் வைத்து கார்ப்பரேஷன் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கக் கூடாது; ஏனென்றல் அம் மேல் வாசலில் பிரிட்டிஷ் இந்தியச் சக்கரவர்த்திக்கும், அவருடைய சன்னது பெற்று வரும் பிரதிநிதிகளுக்குந் தான் பத்திரங்கள் படிக்கலா மென்று பம்பாய்க் கவர்னரும், கவர்னர் ஜெனரலும் சொல்லி விட்டார்களாம்.

நாடார்கள் தமிழ் நாட்டை ஆண்ட ஒரு காலத்தில் பாண்டி நாட்டின் முக்கிய தேவாலயங்களிலெல்லாம் மேல் வாசல் தாங்கள் மட்டுஞ் செல்லக் கூடிய தனிப் பாதையாக வைத்துக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவ் வாசலில் மற்றாரும் செல்ல முடியாமல் அதிகாரத்துடன் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. அவர்கள் அரசு மாறின வுடனே அப் பிரத்தியேக உரிமை மறுக்கப்பட்டு அவ் வாசல்களும் அடைக்கப்பட்டு விட்டன. நாடார்களும் தங்கள் சிறப்புரிமையையும், காலமாறுதலையும் எண்ணிப் பின் வாங்கி விட்டார்கள். இப்போது அவர்கள் கோயிலில் நுழையாத ஓர் வகுப்பினராய்க் கருதப்படுவதும், (ஆப்கன் தேசமும் புராதன இந்தியாவுக்குச் சிறிது மாறுபட்டு விட்டாலும், அத் தேசமும் இந்தியாவே; அவரும் இந்திய ரென்று தான் சொல்ல வேண்டும். இந்தியா அமீரின் தாய் நாடென்று தான் சொல்ல வேண்டும். அத்தகைய) அமீருக்குப் பம்பாய் மேல் வாசலில் பத்திரம் படிக்கக் கூடாதென்று தடுத்திருப்பதும் கால தேவதையின் விநோத வேடிக்கையை விளக்கிக் காட்டுவதாயிருக்கிறது. இவற்றையெல்லாம் சுயமரியாதைச் செல்வன் சுமுகமாய் நோக்கி தூய்மைப் படுத்துவானுக. மண்ணை யாண்டவர் மண்ணிலுங் கோடி யுண்டு; இன்னும் ஆளுவார் எத்தனை கோடியோ வென்று இந்திய ஞானத்தை எல்லோருக்கும் எடுத்துரைப்பானுக.

---

## மகாத்மா காந்தியும், கோவிலும்.

மகாத்மா காந்தி தற்போது சுற்றுப்பிரயாணம் செய்து வந்ததில் சகி கோபால் என்னும் ஊரிலுள்ள தேவஸ்தானக் கமிட்டி மெம்பர்கள் மகாத்மாவை கோவிலுக்குள் வந்து விக்கிரகத்தைப் பார்க்கும்படி அழைத்தார்களாம். அதற்கு ஆதித்திராவிடர்களைக் கோவிலுக்குள் அனுமதிக்காதிருப்பதால் வர முடியாதென மகாத்மா மறுத்து விட்டாராம். இச் சம்பவம் கோயில் கமிட்டியாருக்கும், அர்ச்சகர்களுக்கும் எவ்வளவோ அவமானமாய்த் தானிருக்கக் கூடும். ஆயினும் கோயில் பெருச்சாளிகளைப்போல் மூவாயிரம் பேர்கள் சிதம்பரத்தில் சுவாமிக்கு மிகப் பிரீதியுடையவர்களென்றும், அவர்கள் மூலமாகத்தான் சுவாமி மற்றவர்களுக்குத் தோன்றக் கூடு மென்றும் மனப் பான்மையுள்ள கூட்டத்தார் மத்தியில் நந்தனுரை உள் விட்டிலழைத்து கடவுள் உறவாடிய காலத்திலும் அக் கோயில் பெருச்சாளிகள் மனம் நாணியதாகத் தெரியவில்லை. இது எம்மாத்திரம்!

மகாத்மா ராஜபாளையம் பிரசங்கத்திலும் நாடார்கள் பிரவேசியாத மதுரைக் கோயிலில் தாம் போகச் சந்தர்ப்ப மில்லாமற் போனதைப் பற்றி பெருமையுடன் குறிப்பிட்டிருந்தார். இது மனிதருக்குப் பொதுவான கடவுள் திருவுருவப் பிரதிஷ்டையாகியிருக்கும் கோயில்களில் சில வகுப்பினருக்கு உரிமை யில்லை யென்று மறுப்பது ஞாயமில்லை யென்று மறுப்பவருக்குக் காட்டுவதாகு மென்று விளங்குவதுடன், எல்லா வகுப்பினருடன் கோயிலுக்குள் சம உரிமையுடன் தொழ வேண்டு மென்ற சிரத்தை அதிக முண்டென்பதையும் காட்டுகிறது. என்றுலும், மகாத்மாவுக்கு உண்மையில் கடவுள் கோயிலுக்குட் தானிருக்கிறார்; அங்கே போய்த் தொழுதால் தான் விடுதலை பெறலா மென்று நம்பிக்கை கிடையாது.

அவருடைய நித்திய வாழ்வில் ஆலய தெரிசனம் செய்வதாகத் தெரியவு மில்லை; பிரயாணங்களிலுங் கூட எந்தக் கோயிலுக்குள்ளே யாவது போய்த் தெரிசிக்க விரும்பியதாகவும் தெரிய வில்லை; கைராட்டினந்தான் கடவுள் சன்னிதான மென்று கருதுகின்றாரே யன்றி வெறும் குகையும், கோயிலும் கடவுள் சன்னிதான மென்று கருதுவதாய்த் தெரிய வில்லை. விரைடம்பரத்திற்கும், மூட பக்திக்கும், முழு மோசத்திற்கும் உறைவிடமாயுள்ள தற் காலக் கோயில்களெல்லாம் விபசாரி விடுகளென்று செட்டி நாட்டுப் பிரசங்கத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

மகாத்மா அந்திய நாடு சென்றவரென்ற காரணம் பற்றி கன்னியா குமரிக் கோயிலுக்குள்ச் செல்ல மறுத்து விட்டார்கள். அதை மகாத்மா ஒரு பொருட்டாய்க் கருதி வருத்தப்பட்டா ரில்லை. ஆகையால் மகாத்மா காந்தி கோயில் மீது விருப்ப முடையவராக வில்லை. ஆகையால் ஆதித்திராவிடர் நுழைய உரிமையில்லாத கோயிலுள்த் தாம் வர முடியாது என்று மகாத்மா மறுத்து விட்டால் ஆச்சரிய மொன்று மில்லை யாயினும் அதில் அன்பும், ஆழ்ந்த கருத்தும் அடங்கிக் கிடப்பது உண்மை.

ஆனல் அவர் தென்னுட்டுப் பிரயாணத்தில் ஆதித்திராவிடர்களை, உயர்ந்த ஜாதி யெனச் சொல்லிக் கொள்பவர் நடத்துங் கொடுமைகளை நேரில் கேட்டுத் தெரிந்தவுடனுவது, மலையாளத்தில் கழுதையும், பன்றியும், நாயும் சென்று வரும் தெருவில் ஒரு மனிதன் செல்ல முடியாமல் மகாத்மா கண்ணுக்கும், காதுக்கும் எட்டும்படி இருந்ததோ! ஓ!! வெனக் கத்திக் கொண்டிருந்த கொடுமையைக் கண்ணல் பார்த்துக் காதால் கேட்ட வுடனுவது இக் கொடுமையும், கோரமும் நிறைந்த இந் நாட்டில் இருக்க மாட்டேன்; வீட்டில் புசிக்க மாட்டேன் என்று ஒரு வார்த்தை யாவது சொல்லி இருந்தால் அதிகமான நன்மை யுண்டா யிருக்கக் கூடும். ஆயினும் மகாத்மா சாத்தியப்பட்டதையே சொல்வதும், செய்வதுமா யிருக்கின்றார். அது போல் அவருடைய சகாக்களும் அந்த ஒரு விஷயத்திலாவது நடந்து காட்டுவார்களானல் நாடு நலன் பெறு மென்று நம்புகிறோம்.

---

## சொற் போர்.

திரு. ஈ. வி. இராமசாமி நாயக்கர் அவர்கள், டாக்டர். வரதராஜுலு நாயுடு அவர்கள், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களாகிய மூவருக்கும் தத்தம் பத்திரிகைகள் மூலம் சொற்போர் தொடங்கி யிருக்கிறது. பெரியவர்களுடைய கோபம் பொன் சூடு மாறுவதுபோல் மாறு மென்று சொல்வார்கள். அதுபோல் இம் மூவருடைய கோபமும் அடங்கத்தான் வேண்டும். இச் சண்டையைப் பற்றி தமிழ் நாடு ஒருவாறு திகில் அடைந்த போதிலும், சுயமரியாதைச் செல்வன் அபிவிருத்தி

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## அரியவுரை.

கோயிலுக்குச் செல்ல மகரிஷி ஒருவருக்கு எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு பாத்தியதை ஒருத்திக்கும் உண்டு. ஆனல் அவன் ஆத்மத் தூய்மை பெறும் பொருட்டுக் கோயிலுக்குச் செல்லும்போதே அவ்வுரிமை பெறுகிறாள். ஆனல் மதத்தின் பெயாலும், தெய்வ ஆராதனையைச் சிறப்பிக்கும் பொருட்டும் கோயில் தர்மகர்த்தர்கள் ஒரு விபசாரியைக் கோவிலுக்குள் விடும்பட்சத்தில் கோயில்களை விபசாரக் குகைகளாகவே ஆக்குகிறார்கள்.

மகாத்மா காந்தி.

## ஸ்ரீமான் முதலாளி, மு. மு. முத்துசாமி நாடார் ஞாபகச்சின்ன வாசக சாலை, அருப்புக்கோட்டை.

மேற்கண்ட வாசக சாலையின் ஆதரவில், "நாடார் குல மித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் சு. ஆ. முத்துநாடாரவர்கள் தலைமையின் கீழ் 17-12-27ல் இரவு 9-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் கூடினதில், "நமது நாடார் மகாஜன சங்கம் 5-வது மகாநாட்டில் தலைமை வகித்தவரும், சீர்திருத்த சென்னை மாகாண சட்டசபையின் முதல் அக்கிராசனராயிருந்த வருமான ஸர். பி. இராஜ கோபாலாச்சாரியார் அவர்களது மரணத்திற்கு இவ்வாசகசாலை ஆழ்ந்த அனுதாபப்படுகிறதுடன், ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கும் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிற" தென்னும் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது என ஷை வாசகசாலை காரியதரிசி எழுதுகிறார்.

### வேண்டுகோள்.

சீர்திருத்தத்தை விரும்பி அதனைக் கடைப்பிடித் தொழுகும் சங்கங்கள், கழகங்கள், வாசகசாலைகள், ஏனைய பொது ஸ்தாபனங்கள் யாவும் தங்களது முழு விலாசங்களையும் அடியில் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

காரியதரிசி,
"ஹிந்து மதாபிமான சங்கம்",
காரைக்குடி.

---

யடையவே இப் போர் இப்போது தொடங்கி யிருக்கிறதென்றே பெரும்பாலோர் பெருமகிழ்வடையக் கூடும். முக்குணங்களும், மும் மூர்த்திகளும் முரண்பட்டு மூண்ட சண்டை போலுண்டான இச் சம்பவத்தின் முடிவை தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள்.

நாட்டில் நடக்கும் வகுப்புக் கலகங்களெல்லாம் முடிவில் சுயராஜ்ய ஸ்தலத்திற்கே கொண்டு போய் விடுமென்று மகாத்மா காந்தி கூறியதற் கேற்ப இப் பெரியார்கள் செய்து கொள்ளும் சண்டையின் பலனால் நாட்டைப் பாழாக்கிக் கொண்டிருக்கும் வைதீகக் கொடுமை நசித்து சுயமரியாதைச் செல்வன் வெற்றியடையக் கூடிய நல் வழிக்காகவுமிருக்கலாம். ஆயினும் முடிவை அமைதியுடன் எதிர்பார்ப்போமாக.

---

தற்போது நிகழ்ந்து வரும் முப் பெரியார்களின் சொற்போரில் வெற்றி தோல்வி கையாளும் சொல்லா யுதங்களின் நியாயக் கூர்மையையே பொறுத்திருக்கிறது.

---

## வருணாச்சிரம தரும மகாநாடு.

கிறிஸ்துமஸ் நாளாகிய காங்கிரஸ் வாரத்தில் சென்னையில் "வருணாச்சிரம தரும மகாநாடு" ஒன்று நடக்கப்போவதாகவும், அதற்கு உடசாணைக்கமிட்டித் தலைவராக திரு. வி. ரெங்கநாதஞ் செட்டியாரவர்களை நியமித்திருப்பதாகவும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிறது. திரு. செட்டியாரவர்கள் வருண தருமத்தைச் சரியாய் அநுசரித்து நடந்துவந்தாலல்லது அவரை நியமித்திருக்கக் கூடாது. வருண தருமப்படி செட்டியார் என்ற பட்டம் வைசியருக்கே உரியது. மனிதர்களில் பிறப்பினுல் எவ்வித்தியாசமும் காணமுடியாம லிருப்பதாலும், காணும்படி செய்யவேண்டியது அவசியமில்லை யென்பது இறைவனுடைய திருவருளாயிருப்பதாலும், இறைவனுடைய திருவடியை அடைவதற்காகவே மனித ஜென்மம் கிடைக்கிறதென்பது நூல்களின் துணிபாதலாலும், இதுவே நமது நாட்டின் அநுபவமாகவும் இருந்ததாலும் வருண தருமத்தை உண்டாக்கியவர்கள், வருணத்தை யுணர்த்துவதற்காக சில அடையாளங்களைத் தரிக்கவேண்டுமென்று விதித்திருக்கிறார்கள்.

மநுஸ் மிருதி 2-வது அத்தியாயம்.

44-வது சுலோகம்.

"பிராமணனுக்குப் பஞ்சு நூலாலும், க்ஷத்திரியனுக்கு க்ஷணப்ப நூலாலும், வைசியனுக்கு வெள்ளாட்டின் மயிராலும் மூன்று வட்டமாகத் தோளில் பூணுநூல் தரிக்கவேண்டியது"

இந்த சுலோகத்தின்படி திரு. செட்டியாரவர்கள் வெள்ளாட்டின் ரோமத்தால் செய்த பூணூல் தரித்திருக்கிறாரா வென்று நண்பர்கள் கவனிக்க வேண்டுகிறோம். அவ்விதம் தரித்திருப்பாராயின் அவர் வருணாச்சிரம தரும மகாநாட்டைக் கூட்டுவதில் ஆக்ஷேபனையில்லை. ஆனல் இன்னொரு சந்தேகமும் நமக்கு உண்டாகிறது.

தஞ்சாவூர் ஜில்லா தூவார் என்னும் கிராமத்தில் பார்ப்பனர்களால் கூட்டப்பட்டு நடந்த வருணாச்சிரம தரும மகாநாட்டில், "இப்போது க்ஷத்திரியரும், வைசியரும், இல்லை"யென்று தீர்மானித்தார்களே! இப்போது வைசியர் எங்கிருந்து வந்தார்? நமது செட்டியாரவர்கள் வைசியர் என்ற முறையில் வருணாச்சிரம தருமத்தை யேற்று வேலை பார்க்கிறாரா? அல்லது சூத்திரர் என்ற முறைமையிலா? என்று கேட்கிறோம்.

வைசியர் என்ற முறையில்தான் வேலைபார்க்கிறேன் என்பாராயின் முன் பார்ப்பனர்கள் கூடிச்செய்த தீர்மானத்தின் கதி யென்ன? அது தவறுதலான தீர்மானந்தானென்று அவருடைய தலைவர்களான பார்ப்பனர்கள் ஒத்துக் கொண்டார்களா? இல்லையெனின் சூத்திரர் என்ற முறையில்தான் வேலை செய்கிறாரென்று நாம் அபிப்பிராயப் படலாமா? என்பவற்றிற்கு நமது செட்டியாரவர்கள் பத்திரிகைகள் மூலம் தமது சமாதானத்தை வெளியிடுவாரென்று நம்புகிறோம்.

வருணாச்சிரம தருமத்தின்படி நடக்க முடியாத ஒருவர், அதற்காகக் கூட்டப்படும் கூட்டத்தில் சேர்ந்து வேலை செய்வாரென்று எதிர்பார்க்க முடியாது. ஆதலால் நமது செட்டியாரவர்கள் கீழ்வரும் சுலோகத்தில் கூறியதை ஒத்துக்கொண்டு நடக்கச் சம்மதிக்கிறாரா? என்று கேட்கிறோம்.

மநுஸ் மிருதி 1-வது அத்தியாயம்.

100-வது சுலோகம்.

"பிராமணன் முதல்வருணத் தானனதாலும், பிரம்மாவின் முகமாகிய உயர்ந்த இடத்திற் பிறந்ததினுலும் இந்த வுலகத்தில் உண்டாயிருக்கிற சகலவருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்க அவனே பிரபுவாகிறான்"

---

## செய்தித்திரட்டு.

சின்னாட்களுக்கு முன் கொளும்பில் ஆல்ப்ரட் மாரோ என்பவர் தம்மிடமுள்ள ஸ்படிகக் கண்ணாடியில் உற்று நோக்கி காணமற் போன பொருள்களைக்கண்டுபிடித்துக் காட்டினாராம்.

* *

அலகாபாத்தைச் சார்ந்த ஒரு கிராமத்தில் ஓர் நாளிரவில் ஒரு வெள்ளைய சிப்பாய் வந்து ஒரு பெண் கொடுக்காவிட்டால் சுட்டுக்கொல்வதாக பயமுறுத்தினனெவும், அவனைப் போலீஸார் பிடிக்க வந்தபோழ்து அவர்களைக் காயப்படுத்தினனெவும் கைது செய்யப் பட்டிருக்கிறான்.

* *

கல்கத்தாவில் மதுவருந்தும் ஆசாமிகள் சிலர் மதுவருந்திவிட்டு தெருவழியே போய்க்கொண்டிருக்கையில் "பிராந்தி" என்றெழுதி ஒட்டப் பட்டுக்கீழே கிடந்த சீசாக்களில் அடைக்கப்பட்டிருந்த திராவகத்தைச் சாப்பிட்டுவிட அவர்களில் நால்வர் இறந்து போனார்களாம்.

* *

இரங்கூனில் நாளிது டிசம்பர்மாதம் 17 உயில் கிழக்கு மேற்கான அசைப்புடன் பூகம்ப அதிர்ச்சி யேற்பட்டது. பெருந்த சேத மொன்றும் இல்லை.

* *

மகாத்மாகாந்தி பானபூரில் தங்கியிருந்த சமயத்து, பக்கத்துள்ள ஒரு கிராமத்திற்குப் போய் அங்குள்ள ஓர் தொழிலாளியிடம் அவனது ஜீவனுச் கணக்கு விவரங்களை யெல்லாம் குறித்து கொண்டாராம்.

* *

"சுதேச மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி ஐயங்கார் "இந்து" பத்திரிகை ஆசிரியராகப் போர்வதாய்த்தெரிகிறது.

* *

திருச்சினப்பள்ளியிலுள்ள ரயில்வேத் தொழிலாளர் அனைவரும் சேர்ந்து

---

ஷை 101-வது சுலோகம்.

"ஆதலால் பிராமணன் ஒருவரிடத்தில் தானம்வாங்கினுலும் தன் பொருளையே சாப்பிடுகிறான். தன் வஸ்திரத்தையே உடுத்துகிறான். தன் சொத்தையே தானஞ் செய்கிறான். மற்றவர்கள் அவன்றயையினுலேயே அவற்றை யநுபவிக்கிறார்கள்."

இவ்விரு சுலோகங்களாலும் உலகத்திலேயுள்ள சகலருடைய பொருளும் பிராமணனுடையதும், பிராமணனைத் தவிர வேறு யாருக்கும் எவ்வித பாத்தியமில்லாததும், பிராமணனுலேயே தானமாக வாங்கத் தக்கதுமாயிருக்கிறதாய் வெளிப்படுகிறதல்லவா? இவைகள் நமது செட்டியாரின் தினசரி வாழ்க்கையில் அநுசரிக்கப் படுகிறதா? என்றும் கேட்கிறோம். இல்லையேல், தூவார் மகாநாட்டுத் தீர்மானப்படி சூத்திரர் என்ற முறையில் வேலை பார்க்கிறாரென்று கொள்ளவேண்டியதாய் நேரிடும்.

மநுஸ் மிருதி 1-வது அத்தியாயம்.

91-வது சுலோகம்.

"சூத்திரனுக்கு இந்த மூன்று வருணத்தாருக்கும் பொறாமையின்றி பணி செய்வதை முக்கியமான தருமமா யேற்படுத்தினர். இதனுல் அவனுக்கு தான முதலியவையுமுண்டென்று தோன்றுகிறது"

பிராமணரல்லாதார் சுயமரியாதைக்காகப் போராடுகிற இந்த நேரத்தில் நமது செட்டியாரவர்கள் வருணாச்சிரமதரும மகாநாடு கூட்டுவதற்காக வேலைசெய்வதைப் பார்த்தால், இந்த சுலோகத்தின்படி ஒப்புக்கொண்டு, பொறாமையின்றி பணி செய்கிறார் என்றே நினைக்கக் கூடியதாயிருப்பதால் திரு. வி. ரெங்கநாதஞ் செட்டியாரவர்கள் உடனே தமது கருத்தை வெளியிட்டு சுயமரியாதையுடன் நடந்து கொள்வாரென்று நம்புகிறோம்.

சமதருமவாதி.

---

வேலை நிறுத்த நிதிக்குத் தங்களுடைய ஒருநாள் சம்பளத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

* *

ஐரோப்பாவில் குளிர் அதிகமாய் ஏற்பட்டிருக்கிறது. தண்ணீரெல்லாம் பனிக்கட்டியாய் உறைந்து கிடக்கிறது. பனிப்புயலும் அடிக்கிறதாம். இதனால் ரயில்போக்கு வரவு பல இடங்களில் தடைபட்டிருக்கின்றன. ஜனங்கள் பெரிதும் கஷ்டப்பட்டும் உயிர் துறந்தும் வருகின்றனர்.

* *

அமீர், பம்பாய் நகரில் ஒருநாள் மாலைப் பொழுதில் உலாவச் சென்றவிடத்து, காந்தியடிகளின் வாழ்க்கைத் துணைவி கஸ்தூரிபாயையும், அவரது குமாரர் தேவதாஸ் காந்தியையும் சந்தித்து, கஸ்தூரிபாயிடம், தாம் காந்தியடிகளுக்கு உற்ற நண்பரென்றும், தம்பெயர் அமனுல்லாகான் என்றும் கூறி காந்தியடிகளின் தேகநிலை பற்றி விசாரித்துக்கொண்டு, தம் பாரியை கஸ்தூரிபாய்க்கு அறிமுகஞ் செய்து, தம்மைப்பற்றி காந்தியடிகளுக்கு அறிவித்துக் கொள்ள வேண்டுமென்று கஸ்தூரியை பன் முறையும் வேண்டிக் கொண்டனர்.

* *

துருக்கிக் குடியரசுத் தலைவர் கமால் பாஷா ஆப்கன் அமீர் சகோதரியை விவாகம் செய்யப்போவதாக வதந்தி யுலாவுகிறது.

* *

இந்திய வெள்ள நிவாரணத்துக்காக லண்டனில் இதுவரையும் 1435 பவுன் வசூலாகி பம்பாய் கவர்னருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

* *

இதுவரையும் உலகத்தில் பெரிய குத்துச்சண்டை வீரனய் விளங்கிவந்த 34-வயதுள்ள ஸ்ரீ யூஜனிகிரிக்கி என்பவரை 19-வயதுள்ள ஹாமரி என்பவர் தோற்கடித்து விட்டாரென பாரிஸ் செய்தி கிடைத்திருக்கிறது.

* *

பிரிட்டனில் பிரதி வருடமும் 55,000 பேர் சிறைக்கனுப்பப் படுகின்றனராம்.

* *

நாகபுரி மத்திய சிறையில் தண்டனை அனுபவித்து வரும் ஆயுதச்சட்ட வீரர்கள் தலைவர் அவாரி 75 நாளாக உண்ணவிரதமிருந்து வருகிறார்.

* *

சங்கரன் கோயிலில் தேவாரம் பாடுமுன் தங்களுக்கு விபூதி வழங்க வேண்டுமென பிராமணர்கள் வழக்குத் தொடுத்து வாதிக்கிறார்கள்.

* *

லண்டனில் இருதலைகளுடன் ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறதாம். ஒரு தலை அழும்போது மறுதலை நித்திரை செய்கிறதாம். இதை இரண்டாக்ப் பிரித்துவிடலாமென வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்களாம்.

* *

அருப்புக்கோட்டையில் ஓர் பன்றியீன்ற குட்டிகளில் ஒன்றுக்கு இருதலைகளிருந்தன. பிறந்த சிறிது நேரத்திற்குள் அது இறந்து விட்டது.

* *

கிறிஸ்திய நகரத்திற்கு சமீபமான சந்தையடியூரில் ஒரு ஆடு மூன்று காலுடைய குட்டியொன்று ஈன்றதாம். குட்டி பிறந்த 3 தினங்களுக்குப் பின் இறந்துவிட்டதாம்.

* *

அடுத்த காங்கிரஸைப் பஞ்சாப்பில் கூட்ட வேண்டுமென்றும், தங்கள் அழைப்புக்கு காங்கிரஸ் இணங்கவேண்டுமென்றும் பஞ்சாப் மாகாண காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கிறது.

* *

ராயல் கமிஷன் பகிஷ்காரத்தை இந்து மகாசபை பலமாக வற்புறுத்தி தீர்மானம் செய்திருக்கிறது.

* *

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தொழிற் கட்சியங்கத்தினர் ஸ்ரீ பென்னர் பிராக்வே வேலூரிலிருந்து சென்னைக்கு மோட்டார் லாரியில் வரும்போது மோட்டார் விபத்தேற்பட்டு கால் முறிந்து போனார். சிகிச்சை நடந்து வருகிறது. இவ்விபத்தில் ஒரு கிராமவாசி உயிர்துறந்தார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் ஜன சமூகத்தின் முன்னேற்றம்.

### ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு.

### நமது மகாஜன சங்கமே பிரதானம்.

(மதுரை கே. துரைசாமி நாடார் எழுதுகிறார்.)

நாம், நமது நாடார் மகாஜன சங்கத்தின் மூலம், நமது ஜன சமூகம் முன்னேற்றமடைவான் வேண்டி நீண்ட நாட்களாய் இடைவிடாது பாடுபட்டு வருகின்றோம். அதனால் நம் ஜன சமூகம் அதனுடைய பண்டைப்பெருமையை விட, வருங்காலத்தில் பன்மடங்கு புகழும், உயரிய சிறப்பு மெய்தி வாழப் போகிறதென்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை. அதின் பொருட்டாய் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய கடமைகளைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டுள்ளோம். முக்கியமாக நமக்குள்ளிருக்கும் கக்ஷிபேதங்களையும் அபிப்பிராய பேதங்களையும் அறவே யொழித்து ஒரே கொள்கையும், நோக்கமு முடையவர்களாக இருந்துவரல் அவசியமாகும். சில விடங்களில் நம்மவர்களுக் குள்ளிருக்கும் பிரிவினையின் காரணமாகவே நமது ஜன சமூகம் விசேஷ முன்னேற்றமும் செல்வாக்கும் பெற்றுப்பிரகாசிக்கத் தடைப்பட்டிருந்து வருகிறது. நமக்கு உன்னத நிலைமையை யடைந்து முதற்றர வகுப்பினராய் வாழவேண்டுமென்று ஆசையிருக்குமாகில், நமது சொந்த அவகாசங்களைக் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக்கொடுத்து பொது நன்மைக்காக உழைக்க முன்வர வேண்டும். நாம் முன்னேற்றமடைய வேண்டுமென ஒற்றுமையுடன் விருப்பங்கொண்டு வேலை செய்வோமாகில், யாராலும், எந்த சக்தியினாலும் அதைத் தடுக்கவோ, எதிர்க்கவோ முடியாது. நாம் மட்டும் உறுதியுடன் முன்வருவோமாயின் கட்டாயமாய் வெற்றிமாலை சூடுவோம். சிற்சில விடங்களில் நம் ஜன சமூகத்தினருள் ஒற்றுமை குலைந்து, மனச்சோர்வடைகிறார்கள். அதனால் நம்மவர்களின்ப விர்த்தி பல வழிகளில் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகலின் நாம் ஒரே தாய் வயிற்றில் ஜெனித்த சகோதரர்கள் போன்று ஒற்றுமையுடன் தளர்ச்சியுறாலும், ஏக்கமடையாமலும், ஊக்கத்துடன் பொதுக் காரியங்களை, நம் ஜன சமூக முன்னேற்ற மென்னும் ஜெயக்கொடியை நாட்டும் வரை சலியாது நடத்திவர வேண்டும். மேலும் நாம் பண்டை நாளில் பெற்றிருந்த பெருமைகளைப் பேசிப் பேசி வீண்காலம் போக்குவதில் கொஞ்சமும் பயனில்லை. இப்பொழுது நமது நிலைமை என்ன? உலகம் என்ன போக்கில் போய்க் கொண்டிருக்கிறது? நாம் முன்னேற்றமடைவதற்கு எக்காரியங்களை கைகொண்டு நடாத்தல் வேண்டும்? என நமக்குள் வினவி, ஆராய்ச்சிசெய்து, வேண்டும் வேலைகளைக் கண்ணும் கருத்துமாகச் செய்துவர வேண்டும். இன்றேல், நமது ஜன சமூகம் பெரிய ஏமாற்றமடையக் கூடும். தற்காலமோ ஒவ்வொரு தேசத்தினரும் சமுத்திரத்தில் நடக்கவும், ஆகாயத்தில் பறக்கவும், பதினாயிரம் மைல்களுக்கப்பாலுள்ளவர்களிடம் நேருக்கு நேராகச் சம்பாஷிக்கவும், இன்னும் எத்தனையோ கண்டும் கேட்டுமறியாத பல அற்புதங்களைக் கண்டுபிடித்து நடத்திக்கொண்டிருக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் நாம், நம் ஜன சமூக அபிவிருத்தியைக் கவனியாது தூங்கிக் கொண்டிருப்போமாயின், சமீபத்தில் கணக்கெடுத்து பரீக்ஷிக்கப் போகும் முன்னேற்ற ஜாப்தாவில் கடைசி கலத்தில் எழுத நேரிடுமே என்ற பயமுண்டாகிறது. ஆனதால் நாம் அதற்கிடங்கொடுத்து விடாமல் கல்வி கற்கும் விஷயத்திலும், வியாபாரம், விவசாயத்தை அபிவிர்த்தி செய்யும் விஷயத்திலும், பற்பல நூதன கைத்தொழில்களைக் கண்டுபிடித்து நடத்தும் விஷயத்திலும், மிகவும் ஜாக்கிரதையோடும் ஊக்கத்தோடும் கவனம் செலுத்தி வேலை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வகைக் கனுகூல நிலைக் களனாயமைந்துள்ளது நமது நாடார் மகாஜன சங்க மென்பது ஈண்டு குறிப்பிடப்பாலது. நமது நாடார் மகாஜன சங்கத்தின் ஆதரவின்றி முன்னேற்றமடைந்துவிடலாமென்று சிலர் நினைப்பது பகற்கனவே யாகும். நமது ஜாதியின் அபிவிர்த்திக்கான எக்காரியங்களையும் சங்கத்தின் துணைகொண்டு ஒத்துழைத்தால்தான் சாதிக்கமுடியும்; நம் குறைகளை நிவர்த்திக்கமுடியும், தற்காலம் ஒவ்வொரு தேசமும் பலவித சங்கங்களை அமைத்து ராஜீய பாரத்தை சரியான வழியில் நடத்தி வருகின்றது. தாலுகாபோர்டு, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, சட்டசபை, பார்லிமெண்டு முதலியவைகளெல்லாம் சங்கங்கள்தான். இவைகளின் ஆதரவில்லாவிடில் ஒரு தேசத்தை ஆட்சி புரிய முடியாது. தனிப்பட்ட ஹோதாவில் ஒவ்வொரு வகுப்பினரும், ஒவ்வொரு மதத்தினரும் அந்நியநாட்டு வியாபாரிகளும், விவசாயிகளும், தொழிலாளிகளும் தங்களபிவிர்த்தியின் பொருட்டு சங்கங்களை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்கள். மேலும், உலகத்துக்கே பொதுவாக சர்வதேச சங்கமென ஓர் சங்கமும் நிறுவப்பெற்று எல்லா வல்லரசுகளும் சுபிக்ஷமாக வாழ்வதற்கு ஆதரவாக இருந்து வருகிறது. இது போன்று நம் ஜன சமூகத்தை உயர் நிலைமைக்கு கொண்டு வருவதற்கேதுவாக நம்மால் நடத்தப்பெற்றுவரும் நாடார் மகாஜன சங்கத்தினிடம் நாடார்குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் அன்பும் அபிமானமும் செலுத்தி அதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச் சந்திரனைப்போல பிரகாசிக்கச் செய்வதற்கு பூரணமாக ஆதரவளித்து ஒத்துழைக்க எல்லாரும் தவறாமல் உடனே அங்கத்தினராகச் சேரும்படி பிரார்த்திக்கின்றேன்.

---

## பொட்டுக்கட்டுதல் வேண்டுமா?

### ஸ்ரீ. நடராஜ ஐயரின் கூற்று.

### டாக்டர் முத்துலக்ஷ்மி பதில்

சென்னை ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீ. ஏ. எஸ். நடராஜ ஐயர் பொட்டுக் கட்டுவதனாலேயே விபசாரம் ஏற்பட்டு விடுவதில்லை யென்பதற்கு ஆதாரமாக ஹைகோர்ட்டின் பல தீர்ப்புகளையும் தற்காலம் அனுஷ்டானத்திலிருக்கும் சட்டங்களையும் ஆராய்ச்சி செய்து பார்த்து "ஹிந்து" பத்திரிகையில் ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதற்குப் பதிலாக டாக்டர் முத்துலக்ஷ்மி பின்வருமாறு எழுதுகிறார்:—

ஸ்ரீ. நடராஜ ஐயர் எவ்வளவுதான் சிரமமெடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து பொட்டுக் கட்டுதலுக்கும், விபசாரத்துக்கும் சம்பந்த மில்லை யென்று கூறிய போதிலும் இந்நன தேவதாசிகளின் பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை அனுஷ்டானங்களும் பார்த்தால் அவர் சொல்வது சரி யென்று தோன்றவில்லை. நான் அடிக்கடி, ஆதிகாலத்தில் பொட்டுக்கட்டும் வழக்கம் எப்படிப்பட்ட நல்ல நோக்கத்துடன் ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும், 'தேவதாசி' என்னும் பதத்துக்கு எத்தகைய உயர்வான பொருளைக் கொடுத்திருந்த போதிலும், இக்காலத்தில் நடைபெற்று வரும் அனுஷ்டானத்தில் பொட்டுக் கட்டுதலென்றால் விபசார வாழ்க்கைக்கு அனுமதிப்பதே என்று கூறலாம் என்று எழுதியும், பேசியும் வந்திருக்கின்றேன். அந்த உறுதியான உண்மையின்மீதே என்னுடைய தீர்மானத்தை சென்னை சட்டசபை அங்கத்தினர் ஆதரித்ததுடன் தேவதாசிகளிலும் பலர் ஆதரித்துவருகின்றனர். தேவதாசிகள் சிலர் "சுதேசமித்திரனில்" பல கடிதங்களை எழுதிக் கொண்டு வருகின்றனர். அவர்கள், விவாகம் செய்துகொள்ளாத ஒரு வாழ்கை தங்களுடைய பரம்பரை வழக்கமென்றும், அது மத அனுமதி பெற்றதென்றும் கூறுகிறார்கள். ஆனால், தேவதாசிகள் பரிசுத்தவாழ்க்கையையே மேற்கொண்டு பிரமசரிய விரதத்துடன் இருந்து வருகிறார்களென்றாவது இனியேனும் அவர்கள் அத்தகைய வைராக்கியத்துக்கு உடன்படுவார்களென்றேனும் கூற யாரும் முன்வரவில்லை. ஆகையால் அவர்கள் விபசாரவாழ்க்கையை மேற்கொள்ளவே பொட்டுக் கட்டுகிறார்களென்றும், தேவதாசிகளுக் குழந்தைகளில்லாவிட்டால் இதர குடும்பங்களிலுள்ள குழந்தையை அநியாயமான முறையிலேனும் பெற்று வளர்க்கிறார்களென்றும் நான் தைரியமாகக் கூறுவேன். நான் சமீபத்தில் மதுரைக்குப் போயிருக்கும் போதும் அவ்வாறு அபகரிக்கப்பட்ட ஒரு குழந்தை காப்பாற்றப்பட்டதை நேரில் கண்டேன். ஸ்ரீ நடராஜ ஐயர் தாம் கூறுவது உண்மையென்று விளக்க வேண்டுமாயின், தற்கால தேவதாசிகள் பரிசுத்த கன்னிமார்களாகவும், உண்மையான பக்திபிரம்பியவர்களாகவும், இதர சமூகத்தினரால் மரியாதையுடன் கவனிக்கப் படுகிறவர்களாகவும் இருக்கிறார்களென்று ருஜுப்படுத்த வேண்டும்.

இரண்டாவது விஷயத்தைக் கவனிக்கும்போது ஸ்ரீ நடராஜ ஐயர் தேவதாசிகளின் ஜனத்தொகை விஷயத்தை ஆராய்ச்சிசெய்ய பம்பாய்க்கு ஏன் ஓடுகிறாரென்று தெரியவில்லை. இத் தமிழ்நாட்டிலேயே பிரபல தேவஸ்தலங்களாகிய காஞ்சீபுரம், மதுரை, திருநெல்வேலி, கும்பகோணம், திருப்பதி, திருவண்ணாமலை முதலிய இடங்களிலும், சென்னை ஜார்ஜ்டவுன், திருவல்லிக்கேணியிலும் குடியிருக்கும் தேவதாசிகளின் கணக்கை எடுத்துப் பார்த்தால் அவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதென்று விளங்கும். மேலும் பம்பாய் நகரத்தில் கோவில்களுக்குப் பொட்டுக்கட்டும் வழக்கம் அனுஷ்டானத்தில் இல்லை. மூன்றாவதாக ஸ்ரீ நடராஜ ஐயர் விவாகத்தின் விஷயமாகக் கூறுவதில் நான், விவாகம் பரிசுத்தமானதாயிருப்பதுடன் ஆண் பெண்களை ஆயுட்காலம் முழுதும் ஒன்றாகப் பிணைக்கும் ஒப்பந்தமாக நாகரீக ஜனங்களால் கண்டுபிடிக்கப் பட்டதென்றும், ஒரு நிலையான குடும்ப வாழ்க்கைக்கு விவாகம் அவசியமாயிருக்கிறதென்றும், ஒழுங்கான குடும்ப வாழ்க்கையே சமூகத்தின் நன்மையைக் கவனிக்க அஸ்திவாரமானதென்றும் அறிவிக்க விரும்புகிறேன்.

பொட்டுக் கட்டுதலினால் விபசார வாழ்க்கைக்குப் புனிதமான அனுமதி கிடைக்கிறதென்று நான் கூறிக்கொண்டிருக்கையில் ஸ்ரீ ஐயர் பொட்டுக்கட்டுதல் பிரமசரிய வாழ்க்கைக்கு அஸ்திவாரமென்றும், அதுவே மோக்ஷ சாதனமென்றும் கூறுகிறார். நான் அவருடைய கருத்துக்கு விரோதமாக இருப்பதனால் இதை பொது ஜனங்களின் ஆராய்ச்சிக்கே விட்டு விடுகின்றேன். மேலும் ஸ்ரீ ஐயர் அறிவிற்சிறந்த தேவதாசிகள் பிறருக்கு அதைப் பற்றி யொன்றும் கூறாமல் தம்மட்டில் தமக்குத் தோன்றிய வாறு அனுஷ்டிக்க வேண்டுமென்று கூறுகிறார். இது என்ன விந்தை! புராதன காலம் முதல் சீர்திருத்தக்காரர்களும், குருநாதர்களும் தாம் கண்டவற்றை மக்களுக்கு அறிவுறுத்த எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களை யடைந்திருக்கும்போது நாம் எவ்வாறு உண்மையைப் பிரசாரம் செய்யாமலிருத்தல் முடியும்? ஸ்ரீ கிருஷ்ண, சைதன்யர், புத்தர், கிறிஸ்துநாதர், முஹம்மது நபி, சாகரத்தீஸ், ராஜாராம் மோகன் ராய் ஆகியோரின் உபதேசங்களைப் பின்பற்றாத மனிதர்கள் உலகத்தில் இருப்பார்களானால் இப்போது உலகம் எவ்வளவு கொடிய வனமாக இருக்குமென்று நினைக்கிறீர்கள்! ஒருவர் அறிவாளர் என்பதற்கு அவர் தம் சமூகத்துக்குத் தம் அறிவைப் பயன்படுத்துவதுதான் அறிகுறியன்றோ? எனவே பகுத்தறிவுள்ள எந்த தேவதாசிகளும் ஸ்ரீ ஐயரின் பொருளற்ற உபதேசத்தைப் பொருட்படுத்த மாட்டார்களென்றே நம்புகிறேன்.

முக்கியமாக ஸ்ரீ ஐயர் ஒரு கேள்வி கேட்கிறார். அதாவது விபசார வாழ்க்கையை மேற்கொள்ள விரும்பாத தேவதாசிகள் ஏன் எவரையேனும் விவாகம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கையை அனுஷ்டிக்கலாகாதென்று கேட்பதேயாகும். நானும் நம் சமூகத்தின் கண்ணிய புருஷர்கள் ஏன் தேவதாசிகளை விவாகம் செய்து கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். நம் சமூகம் அத்தகைய விவாகத்தை மரியாதையுடன் வரவேற்குமா? நம் தாழ்த்தப்பட்டவர்களென் போரும் "தேவடியாள் அல்லது தேவதாசி" என்றால் மிகக் கேவலமென்றே கருதுகின்றனர்.

இன்னமும் ஸ்ரீ. நடராஜ ஐயர் நான் கொண்டுவந்த தீர்மானத்தைப் போன்ற சட்டத்தால் இந்துப் பெண்கள் தெய்வத் தொண்டு செய்தலென்னும் உரிமையைப் பெறமுடியாமற் போகின்றது என்றும் அவர்கள் மதத்துக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்ய முடியாமற் போகிறதென்றும் கூறுகிறார். ஆ! இத்தகைய சட்டம் எவ்வளவு தீமையை வாரிக்கொண்டு வரப் போகிறது? இதனால் ஸ்ரீ. ஐயர் கடவுள் தொண்டு செய்ய விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் தேவதாசிகளைப் போல் பொட்டுக்கட்டிக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறாரா? அவ்வாறாயின் நான் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து பதில் சொல்லும்படி இம்மாகாணத்திலுள்ள கற்றறிந்த பெண்மணிகளனைவரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அவர் ஏன் தேவதாசிகளான தம் கட்சிக்காரர்களை பொட்டுக் கட்டுதலென்னும் வழக்கத்தை யொழித்து விட்டுப் பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்ளும்படி செய்யலாகாதென்று கேட்கிறேன். பக்தி நிரம்பிய உத்தம பக்த சிரோமணிகள் தேவதாசி வர்க்கத்திலேயே இருக்கவேண்டுமென்று ஏதேனும் நியதி உண்டா? அவ்வாறாயின் தேவதாசிகள் ஏன் அவ்வளவு கேவலமான வாழ்க்கையை மேற்கொண்டனர்? அன்றியும் ஏன் பெண்கள் சங்கம், பெண்கள் விடுதி முதலிய இடங்களில் தேவதாசிகள் அனுமதிக்கப்படுவதில்லை? என்று கேட்கிறேன். மேலும் ஒரு கூட்டத்தில் தேவதாசிகள் பக்கத்தில் உட்காரவும் குடும்ப ஸ்திரீகள் வெட்கப்படுவதன் காரணம் யாது? தேவதாசிகளுடைய பக்தியையும் பரிசுத்தத்தையும் அறிந்து கொள்ளமுடியாத அவ்வளவு குருட்டுத்தனமாக நம் சமூகம் இருக்கிறதென்று ஸ்ரீ ஐயர் கருதுகிறாரா? என்னுடைய இத்தகைய கேள்விகளெல்லாம் பதில் சொல்ல முடியாதனவா யிருப்பதற்காக நான் மிகவும் விசனப்படுகிறேன்.

மேலும் ஹிந்துக் கோயில்களில் தேவதாசிகளின் ஊழியத்தை அனுமதிக்கும் ஆகமங்களையும் கல்பங்களையும் அவமதிக்கக் கூடாதென்று ஸ்ரீ ஐயர் கூறுகின்றார். அவ்வாறாயின் திருவாங்கூர், பிரிட்டிஷ் மலையாளம், மத்திய மாகாணம், வங்காளம், பஞ்சாப் முதலிய இந்தியாவின் இதர பாகங்களில் அப்புஸ்தகங்களை ஏன் பொருட்படுத்தவில்லை என்று விளங்கவில்லை. இந்த தேவதாசிகள் கோயில்களில் இல்லாவிட்டால் ஆலயந் தொழுதல் பூர்ணமடைவதில்லை யென்று ஸ்ரீ ஐயர் கருதுகிறாரா? இதற்குப் பதில் வேண்டுமாயின் மைசூர் சர்க்கார் உத்தரவையும், ஐக்கிய மாகாண சட்டசபையின் பதிலையும் கவனிக்கும்படி அவரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எனவே, நான் கீழ்வரும் இவ்விஷயங்களை மட்டும் கூறிவிட்டு இவ் வாதத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீ. நடராஜ ஐயர் பொட்டுக் கட்டுதலுக்கும் விபசாரத்துக்கும் சம்பந்தமில்லை யென்றும், பொட்டுக் கட்டுதல் பரிசுத்த வாழ்க்கைக்கு அஸ்திவாரக் கல் நாட்டுதலே யென்றும் கூறுகிறார். ஆனால் நான் என் அனுபவத்தைக் கொண்டும், பொது ஜன அபிப்பிராயத்தைக் கொண்டும் தற்காலத்தில் மத சம்பந்தமான தொண்டு செய்தலென்னும் பெயரால் பொட்டுக் கட்டுகிறது விபசார வாழ்க்கையை அனுஷ்டிக்க அனுமதி பெறுவதாகவே இருக்கிறதென்று கூறுகிறேன். ஆதலின் நான் இத்தகைய இழி செயலுக்கு இருக்கும் மத அனுமதியை நீக்கி விடும்படியே கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆதலின் பெண்கள் பொட்டுக் கட்டிக் கொள்வதால் விபசாரம் செய்கின்றனரா அல்லது பரிசுத்த வாழ்க்கையை அனுஷ்டிக்கின்றனரா என்பதை யோசித்துத் தக்க பரிகாரத்தைத் தேடும்படி பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

## மகாதமா காந்தி எழுதியது.

காந்தியடிகள் எழுதிவரும் ஆத்ம கதை 4-ம் பாகம், 26-ம் அத்தியாயத்தின் இறுதியில் "* * * ஆதலின் என்னுடைய சத்திய சோதனைகளை வரிசைக் கிரமப்படி படிக்க விரும்புவோர் இப்போது தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரஹ சரித்திரத்தை எடுத்துக்கொள்வார்களாக" என்று கூறியுள்ளார். இச் சரித்திரத்தின் பெரும் பகுதி அடிகளால் எரவாடா சிறைச் சாலையிலும், மற்றப்பகுதி சிறைக் கூடத்திலிருந்து வெளிவந்த பின்னரும் குஜராத்தியில் எழுதப்பட்டு "நவஜீவ"னில் பிரசுரிக்கப்பட்டுப் பின்னர் புத்தக வடிவில் வெளியிடப் பட்டது. ஆங்கிலத்தில் ஸ்ரீவால்ஜி கோவிந்தஜி அவர்களால் அந்நூல் மொழி பெயர்க்கப்பட்டு "காண்ட்தாட்" பத்திரிகையில் வெளியாகி வருகிறது. தமிழ் மொழி பெயர்ப்பு வருமாறு:—

தென்னுப்பிரிக்கா இந்தியர்களின் சத்தியாக்கிரஹப் போராட்டம எட்டு வருஷ காலம் நீடித்திருந்தது. முதன் முதலில் அப்போராட்டம் சம்பந்தமாகவே சத்தியாக்கிரஹம் என்னும் வார்த்தை சிருஷ்டிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டது. அப்போராட்டத்தின் சரித்திரத்தை நான் எழுத வேண்டுமென்று எனக்கு நீண்ட நாளாக ஆசையுண்டு. சில விஷயங்கள் நான் ஒருவனே எழுதக்கூடும். யுத்தத்தின்போது குறிப்பிட்ட ஒரு சண்டையை நடத்தும் தளபதிக்கே அச்சண்டையில் துருப்புகள் நடமாட்டம் ஒவ்வொன்றின் நோக்கமும் தெரிந்திருக்க முடியும். அரசியல் துறையில் பெரிய அளவில் சத்யாக்கிரஹ சாதனத்தைக் கையாள்வதற்குச் செய்த முயற்சி இதுவே முதலாவதாகையால், அது வளர்ச்சியடைந்த விதத்தைப்பற்றி ஜனங்கள் தெரிந்து கொள்ளுதல் என்றைக்கும் அவசியமாகும்.

ஆனல் இன்று இந்தியாவில் சத்யாக்கிரஹம் பல துறைகளிலும் கையாளப்பட்டுப் பரீட்சிக்கப்பட்டிருக்கிறது. வீரம்காம் சுங்கவரி சம்பந்தமான சிறு விஷயத்தில் தொடக்கமாகி ஒன்றன் பின் ஒன்றாய்ப் பல போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

வாத்வானைச் சேர்ந்தவரும், பொதுநல ஊக்கமுள்ளவரும், உத்தமருமான பாய் மோதிலால் என்பவர் மூலமாகவே எனக்கு வீரம்காம் சுங்கவரி விஷயத்தில் சிரத்தை உண்டாயிற்று. 1915-ம் ஆண்டில் நான் இங்கிலாந்திலிருந்து அப்போதுதான் திரும்பி வந்து கத்தியவாருக்கு மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். வழியில் வாத்வான் ஸ்டேஷனில் மோதிலால் இன்னும் சிலருடன் என்னைப் பார்க்க வந்தார். வீரம்காம் ஜனங்கள் உள்ளாக்கப்படும் கஷ்டங்களைப்பற்றி அவர் சில விவரங்கள் கூறிவிட்டு "இந்தத்தொல்லையை நிவர்த்திக்கத் தயவுபண்ணி ஏதேனும் செய்யுங்கள். தங்கள் பிறந்த நாடாகிய கத்தியவாருக்குப் பேருழியம் செய்தவர்களாவீர்தன்" என்றார்.

அவர் கண்களில் கருணையும், உறுதியும் கலந்து பிரகாசித்தன.

"நீங்கள் சிறை செல்லத் தயாராயிருக்கிறீர்களா?" என்று கேட்டேன். "தூக்கு மேடைக்குப் போகவும் சித்தமாயிருக்கிறோம்" என்று உடனே பதில் வந்தது.

"சிறை செல்லத் தயாராயிருந்தாலே எனக்குப்போதும். ஆனல், நடுவில் என்னைக் கைவிட்டுப் போய்விடக் கூடாது" என்றேன்.

"சமயம் நேரும்போதுதானே அது தெரியவரும்" என்று மோதிலால் பதிலளித்தார்.

நான் இராஜகோட்டை சேர்ந்ததும் மேற்படி விஷயத்தைப்பற்றி இன்னும் விவரங்கள் தெரிந்து கொண்டு அரசாங்கத்துடன் கடிதப்போக்கு வரவு தொடங்கினேன். பகஸ்ராமுதலிய இடங்களில் பேசுகையில், அவசியமானல் ஜனங்கள் வீரம்காமில் சத்தியாக்கிரஹம் செய்யத் தயாராயிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன். அரசாங்க விசுவாசமுள்ள சி. ஐ. டி. காரர்கள் இந்தப் பிரசங்கங்களை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்கள். இதன் மூலம் அவர்கள் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, தங்களையறியாமலே ஜனங்களுக்கும் சிறந்த ஊழியம் புரிந்தார்கள். கடைசியாக, இவ்விஷயத்தைப்பற்றி லார்டு செம்ஸ் போர்டுடன் சம்பாஷித்தேன். சுங்கவரி எல்லையை நீக்கி விடுவதாக அவர் வாக்குறுதி செய்து அவ்வாறே அதை நிறைவேற்றினர். மற்றவர்களும் இதற்காக முயற்சிசெய்தார்களென அறிவேன். ஆனல் சத்தியாக்கிரஹ இயக்கம் ஏற்படக் கூடுமென்னும் காரணமே விரும்பிய பரிகாரத்தைத் தேடித் தந்ததென்பது என்திட்டமான அபிப்பிராயமாகும்.

பின்னர், ஒப்பந்தத் தொழிலாளிச் சட்ட விஷயம் எழுந்தது. அச்சட்டத்தை ரத்து செய்வதற்குப் பெரு முயற்சிகள் செய்யப்பட்டன. பொது ஜனங்களிடையே பலமான கிளர்ச்சி நடந்து வந்தது. பம்பாயில் நடந்த பொதுக்கூட்டம், ஒப்பந்தத் தொழிலாளிமுறை நிறுத்தப் படுவதற்கு 1917-ம௵ ஜூலை மீ 31 உ யைக் கடைசி நாளாகக் குறிப்பிட்டது. குறிப்பிட்ட அத்தேதி எப்படி நிர்ணயிக்கப்பட்டது என்று விவரிக்க இஃது இடமன்று. முதலில் இது சம்பந்தமாகப் பெண்மணிகள் பிரதிநிதிக் கூட்டம் ஒன்று இராஜப் பிரதிநிதியைப் பேட்டிகண்டு பேசிற்று. இது சம்பந்தமாக, ஸ்ரீமதி ஜயஜிபெடிட் என்னும் உத்தம சகோதரியின் பெயரை நான் குறிப்பிட்டே தீரவேண்டும். அப்பிரதிநிதிக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர் அவரே யென்று சொல்லலாம். இங்கேயும், சத்தியாக்கிரகத்துக்குத் தயாராயிருந்த காரணத்தினலேயே வெற்றிகிடைத்தது. ஆனல் இவ்விஷயத்தில் பொதுஜனக் கிளர்ச்சியும் அவசியமாயிருந்தது என்னும் வித்தியாசத்தை நினைவு கூர்தல் அவசியம். வீரம்காம் சுங்கத்தை எடுப்பதைவிட, ஒப்பந்தத் தொழிலாளி முறையை நிறுத்துவது பெரிதும் முக்கியமானதாகும். ரவ்லட் சட்டந் தொடங்கி லார்டு செம்ஸ் போர்டு ஒன்றன் பின் ஒன்றாய்ப் பல தவறுகளைச் செய்தார். எனினும், அவர் மதியூகம் வாய்ந்த இராஜ்ய நிர்வாகி என்பதே என் அபிப்பிராயம். ஆனல் எந்த இராஜப் பிரதிநிதிதான் சிவில் சர்விஸ் வர்க்கத்து நிரந்தர உத்தியோகஸ்தர்களின் செல்வாக்குக் குட்படாமல் நீண்ட காலம் இருக்கமுடியும்?

வரிசைக்கிரமத்தில் மூன்றாவதாக வரும் சம்பரான் போராட்டத்தைப் பற்றி இராஜேந்திர பாபு விரிவான சரித்திரம் எழுதியிருக்கிறார். இங்கே சத்யாக்கிரஹம் செய்ய வேண்டியேயிருந்தது. அதற்குத் தயாராயிருந்தது மட்டும் போதவில்லை. ஏனெனில் பணபலமும், அதிகாரமும் படைத்தவர்கள் கட்டுப்பாடாக நின்று எதிர்த்தார்கள். சம்பரான் ஜனங்கள் பூரண அமைதி பாதுகாத்தது இங்கே குறிப்பிடத்தக்கதாகும். தலைவர்கள் மன மொழி மெய்களால் பரிபூரண அஹிம்சையைக் கடைப்பிடித்தார்கள் என்று நான் உறுதி கூறமுடியும். ஆகையினலேயே அந்த நீண்ட கால அநீதி ஆறு மாதத்தில் அழிந்தொழிந்தது.

நான்காவது சத்தியாக்கிரஹப் போராட்டம் ஆமதாபாத் ஆலைத் தொழிலாளிகள் நடத்தியதாகும். இதன் வரலாற்றை குஜராத் வாசிகள் நன்கறிவார்கள். இங்கே தொழிலாளிகள் அமைதி பாதுகாத்தது வியக்கத்தக்க தொன்று. தலைவர்களைப் பற்றியோவென்றால், நான் சொல்வதெதுவும் மிகையேயாகும். எனினும், இப்போராட்டத்தில் அடைந்த வெற்றி முற்றிலும் தூய்மை பொருந்தியது என்று நான் சொல்லமாட்டேன். தொழிலாளர்கள் உறுதி பிறழாதிருக்கும் பொருட்டு நான் உபவாச விரதம் கைக்கொண்டதானது, ஆலைச் சொந்தக்காரர்கள் மனந்திரும்புவதற்கு ஓரளவு காரணமாயிருந்தது. அவர்கள் என்னிடம் அன்பு வைத்திருந்தபடியால் என்னுடைய உபவாசம் அவர்கள் உறுதியைப் பாதித்தேயிருக்கவேண்டும். ஆயினும் அப்போராட்டத்தின் படிப்பினை தெளிவான தொன்றாகும். தொழிலாளர்கள் அமைதியுடன் தங்கள் போராட்டத்தை நடத்திக் கொண்டுபோனல் அவர்கள் வெற்றி பெறுவதோடின்றித் தங்கள் எஜமானர்களின் இதயங்களையும் கவர்ந்தே விடுவார்களென்பது நிச்சயம். இங்கே, அவர்கள் மன, மொழி, மெய்களில் குற்ற மற்றவர்களாய் இல்லாதபடியால் எஜமானர்களின் அன்பைக் கவரமுடியவில்லை. செயலளவிலேனும் அவர்கள் அஹிம்சை கடைப்பிடித்தது பாராட்டுதற்குரியதே யாகும்.

ஐந்தாவது, கெயிரா என்று சாதாரணமாகச் சொல்லப்படும் கேதா போராட்டம். இப்போராட்டத்தில் தலைவர்கள் எல்லாரும் சத்தியத்தை முற்றிலும் கடைப்பிடித்தொழுகினர்கள் என்று சொல்லமுடியாது. அமைதி காக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை; ஆனல் குடியானவர்களின் அஹிம்சை, ஆலைத் தொழிலாளிகளின் அஹிம்சையைப் போலவே மெய்யளவில் நின்று விட்டது. ஆதலின் வெற்றியும் முற்றும் புகழுக்குரியதாயிருக்கவில்லை. பொதுஜனங்களிடையே பெருவிழிப்பு ஏற்பட்டது உண்மையே. ஆனல் கேதா அஹிம்சைப் பாடத்தின் கருத்தை நன்குணரவில்லை. ஆலைத் தொழிலாளிகள் அமைதியின் உட்பொருளை அறியவில்லை. எனவே ஜனங்கள் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. ரௌலட் சட்ட சத்தியாக்கிரஹத்தின் போது ஹிமாலயத்தை யொத்த என் பெருந்தவறை ஒப்புக்கொண்டு அதற்குக் கழுவாயாக நான் உபவாசமிருத்தலும் பிறரையும் உபவாசமிருக்கக் கேட்டுக் கொள்ளுதலும் அவசியமாயின.

ஆறாவது, ரௌலட் சத்தியாக்கிரஹமாகும். இதில் நம்முடைய குறைகள் எல்லாம் நன்றாக வெளியே வந்தன. ஆனல் அடிப்படைமட்டும் உறுதியாகவும் உண்மையாகவும் போடப்பட்டது. நம்முடைய குறைகளையெல்லாம் ஒப்புக்கொண்டு அவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்தோம். ரௌலட் சட்டம் பிறந்த உடனேயே இறந்ததிற்குச் சமமாயிற்று. கடைசியில் அது சட்ட புத்தகத்திலிருந்தும் எடுத்து விடப்பட்டது. இப்போராட்டம் நமக்கு ஒரு பெரிய படிப்பினை கற்பித்தது.

கிலாபத், பஞ்சாப் அநீதிகளுக்குப் பரிகாரந்தேடவும், சுயராஜ்யம் அடையவும் ஏழாவது போராட்டம் தொடங்கப்பட்டது. அஃது இன்னமும் நடந்து கொண்டு வருகிறது. ஒரே ஒரு சத்தியாக்கிரஹி இறுதிவரை உறுதியாய் நின்றாலும் வெற்றி நிச்சயம் என்பதில் என் நம்பிக்கை எள்ளளவும் குறையவில்லை.

ஆனல் தற்போது நடக்கும் போராட்டம் சரித்திரத்தில் இதிகாசமெனப் பெயர்பெறக் கூடியதொன்றாகும். நம்மையறியாமலே இப்போராட்டத்துக்கு நாம் தயார் செய்யப்பட்டு வந்ததை முன்னமே விவரித்திருக்கிறேன். வீரம்காம் போராட்டத்தை நான் ஏற்றுக்கொண்ட போது இன்னும் பல போர்கள் எனக்குக் காத்திருக்கின்றன என்னும் விவரம் எனக்குத் தெரியவே தெரியாது. வீரம் காமைப்பற்றியும் நான் தென்னுப்பிரிக்காவில் இருந்தபோது எனக்கு ஒன்றும் தெரியாது. சத்தியாக்கிரஹத்தின் சிறப்பு இதுவேயாகும். ஒருவன் சத்தியாக்கிரஹப் போரைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை. அது தானே அவனைத் தேடிவருகிறது. இது சத்தியாக்கிரஹ தத்துவத்திற்கு இயல்பான மேன்மையாகும். தர்ம யுத்தத்திலே இரகசியமாய்ப் பாதுகாக்க வேண்டிய மர்மங்களுக்கும், தந்திரமந்திரங்களுக்கும், அசத்தியத்துக்கும் இடங் கிடையாது. அத்தகைய தர்மயுத்தம் ஒருவனைத் தேடிவருகிறது. சமயப் பற்றுள்ள மனிதன் அதற்கு எந்த நேரத்திலும் ஆயத்தமாயிருக்கிறான். முன் கூட்டியே தயார் செய்யப்பட வேண்டியிருக்கும் போர் அறப்போர் ஆகமாட்டாது. அறப்போரில் ஆண்டவனே முன் நின்று சண்டைகளை நடத்துகிறான். அவனே திட்டங்கள் வகுக்கிறான். ஆண்டவன் பெயரால் மட்டுமே தர்மயுத்தம் நடத்தக் கூடும். அத்தகைய யுத்தத்தில் சத்தியாக்கிரஹி முற்றும் பலவீனமடைந்து சுற்றிலும் இருளைத் தவிர வேறொன்றும் காணுத திக்கற்ற நிலையை அடையும் போதே ஆண்டவன் அவன் துணைக்கு வருகிறான். நாம் காலால் மிதிக்கும் தூசியைவிடத் தாழ்மையுள்ளோம் என்று உணரும்போதே இறைவன் அருள்புரிகிறான். பலவீனர்களுக்கும் திக்கற்றவர்களுக்குமே பகவான் அருட்டுணை அளிக்கப்படுகிறது.

நாம் இன்னமும் இவ்வுண்மையை நன்குணர்ந்தோமில்லை. ஆதலின் தென்னுப்பிரிக்கா சத்யாக்கிரஹ சரித்திரமானது நமக்குப் பயன் படக் கூடுமெனக் கருதுகிறேன்.

தற்போதைய போராட்டத்தில் நமக்கு நேர்ந்து வரும் அநுபவங்களுக்கெல்லாம் தென்னுப்பிரிக்கா சத்தியாக்கிரஹத்தில் உதாரணங்கள் இருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம். தற்போது நடக்கும் போராட்டம் சம்பந்தமாக நாம் நம்பிக்கை யிழந்து சோகமுற்று விடுவதற்கு முகாந்திரமெதுவுமில்லை யென்பதையும் இச் சரித்திரத்திலிருந்து வாசகர்கள் அறிந்துகொள்ளலாம். வெற்றிக்கு ஓரே ஒரு நிபந்தனை யாதெனில், நமது திட்டத்தை உறுதியுடன் கடைப்பிடிப்பதேயாகும்.

இதை நான் ஜுஹூவில் எழுதுகிறேன். இச் சரித்திரத்தின் முதல் முப்பது அத்தியாயங்களை எரவாடா சிறைக்கூடத்தில் எழுதினேன். நான் வாயினல் சொல்லிவர இந்நூலால் ஸ்ரீ யாக்னிக் எழுதிவந்தார். பிந்தைய அத்தியாயங்களை இப்போது எழுதிமுடிக்க உத்தேசித்திருக்கிறேன். சிறையில் நான் இச்சரிதம் சம்பந்தமாகப் பார்த்துக்கொள்வதற்குப் புத்தகங்கள் எதுவும் கிடைக்கவில்லை. இப்போது அத்தகைய புத்தகங்கள் சம்பாதித்துக் கொள்ளவும் எனக்கு விருப்பமில்லை. ஒழுங்கான ஏற்பாட்டுடனும், விரிவாகவும் சரித்திரம் எழுதும் உத்தேசமோ, அதற்கு வேண்டிய அவகாசமோ எனக்குக் கிடையாது. இச்சரித்திரத்தை எழுதுவதில் என்னுடைய ஒரே நோக்கம் யாதெனில், நமது தற்போதைய போராட்டத்திற்கு அஃது உதவியாயிருப்பதுடன் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய சரித்திராசிரியருக்கு வழி காட்டியாயிருக்குமென்பதே யாகும். ஆதாரப் புத்தகங்கள் முதலியன இல்லாமலே எழுதுகிறேனுயினும், இச்சரித்திரத்தில் கூறப்படும் ஒரு விஷயமேனும் பிழைபாடுள்ளதாகவோ, மிகைப்படுத்தப்பட்டதாகவோ இருக்குமென எண்ணவேண்டாமென்று வாசகர்களை வேண்டிக் கொள்கிறேன்.

---

நாடு சுக முற்றிட நாடுவோம்
(நாடுகையில்
கேடு பல சூழினும் கிஞ்சித்
(தும் அஞ்சிடோம்
மாடுபோல் இந்தியர்கள் மற்ற
(வர் வாழும்படி
பாடு கொண் டுழைத்து வந்த
(பாடுதனை நீக்குவோம்.